**தேசிய போக்குவரத்து ஆணைக்குழு (தேபோஆ)**

**முகவரி**

241இ பூங்கா வீதிஇ

கொழும்பு 05

**இணையத்தளம்**

www.ntc.gov.lk

**மின் அஞ்சல்**

info@ntc.gov.lk

**துரித அழைப்பு**

1955

கௌரவ போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர்,
போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு,
டீ.ஆர். விஜேவர்தன மாவத்தை,
கொழும்பு 10.

**ஆண்டறிக்கை - 2016**

1971இன் 38ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14 (2) பிரிவின் நியதிகளின் படியும் அரசாங்கத் தொழில் முயற்சிகளின் நல்லாட்சிக்கான வழிகாட்டல்களின் அத்தியாயங்கள் 05 மற்றும் 06 இன் படியும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் 2016 திசெம்பர் 31ஆந் திகதி முடிவுற்ற ஆண்டிற்கான ஆண்டறிக்கை செயலாற்றுகை அறிக்கை, வருடாந்த கணக்குகள் அறிக்கை மற்றும் கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை ஆகியவற்றை மிகவும் மகிழ்ச்சியுடன் சமர்ப்பிக்கின்றேன்.

பொறியியலாளர் எம்.ஏ.பி. ஹேமச்சந்திர,
தலைவர்,
தேசிய போக்குவரத்து ஆணைக்குழு

# உள்ளடக்கம்

**அத்தியாயம்** **பக்கம்**


ஆணைக்குழுவின் அங்கத்தவர் குழு .................................................................................................... 05

தலைவரின் செய்தி ............................................................................................................................ 07

மொத்தப் பகுப்பாய்வு ........................................................................................................................ 09

ஆணைக்குழுவின் அமைப்பு ................................................................................................................ 10

2016 ஆம் ஆண்டின் செயலாற்றுகை ................................................................................................. 11

1. சமூக நலன்களை முதன்மைப் படுத்திய பேருந்துச் சேவைகளை வழங்குதல் .......... 11

1.1 பாடசாலைப் பேருந்துச் சேவை வேலைத்திட்டம் “சிசு செரிய” ............................ 11

1.2 கிராமிய பேருந்துச் சேவை வேலைத்திட்டம்- “கெமி செரிய” .............................. 13

1.3 இரவுநேரப் பேருந்துச் சேவை வேலைத்திட்டம் - “நிசி செரிய” ........................... 14

2. நேர அட்டவணைகளைத் தயாரித்தல் மற்றும் திருத்தியமைத்தல் .............................. 15

3. பேருந்து ஊழியர்களைப் பதிவுசெய்தலும் பயிற்சி அளித்தலும் ................................. 15

4. பேருந்துக் கட்டண முரண்பாடுகளை அகற்றுதல் ........................................................ 16

5. வீதிப் பாதுகாப்பு குறித்து விழிப்பூட்டல் நிகழ்ச்சிகள் ................................................... 17

6. தனியார் பேருந்துச் சேவையினைப் புனரமைத்தல் ....................................................... 18

6.1 பேருந்துத் தரிப்பிடங்களை அமைத்தல் ................................................................. 18

7. உள்ளகத் தகவல் தொழில்நுட்பத் தொகுதி ............................................................... 20

8. ஆய்வு ........................................................................................................................... 20

9. பொதுப் போக்குவரத்திற்கு பீளூ தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல் ...................... 21

10. பேருந்துகளைப் பௌதிக ரீதியகப் பரிசோதித்தல் மற்றும் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரம் வழங்குதல் ................................................................................ 22

11. மக்கள் முறைப்பாடுகள் ................................................................................................ 23

12. நடமாடும் பரிசோதனை மற்றும் விசாரணை .............................................................. 24

13. தேசிய போக்குவரத்து புள்ளிவிபர அறிக்கை ............................................................. 25

14. ஊழியர் பயிற்சி மற்றும் அபிவிருத்தி .......................................................................... 26

வருடாந்த கணக்குகள் ......................................................................................................................... 27

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை ............................................................................... 38

## ஆணைக்குழுவின் அங்கத்தவர் குழு

## 2016 ஜனவரி முதல் 2016 ஏப்பிரல் வரை

1. பொறி.திரு. எம்.ஏ.பி. ஹேமச்சந்திர - தலைவர்
2. பேராசிரியர் அமல் எஸ். குமாரகே - உறுப்பினர்
3. திரு. டப்ளியூ.டப்ளியூ. ஹரிசன் - உறுப்பினர் (பதவி வழி)
4. திரு. ஆனந்த விஜயரத்ன - உறுப்பினர் (பதவி வழி)
5. திரு. ஏ.எம். அசங்க தயாரத்ன - உறுப்பினர் (பதவி வழி)
6. விரிவுரையாளர் ஜயசிறி கருணாநாயக்க - உறுப்பினர்
7. வைத்தியர் எம்.எச்.எம். உதித்த பிரபாஷ் ஹேரத் - உறுப்பினர்
8. சட்டத்தரணி தனுஷ்க வெலிகம - உறுப்பினர்

## 2016 ஏப்பிரல் முதல் 2016 ஜுலை வரை

1. பொறி.திரு. எம்.ஏ.பி. ஹேமச்சந்திர - தலைவர்
2. பேராசிரியர் அமல் எஸ். குமாரகே - உறுப்பினர்
3. திரு. ஏ.எம்.ஆர்.ஜே.கே. ஜயசிங்க - உறுப்பினர் (பதவி வழி)
4. திரு. ஆனந்த விஜயரத்ன - உறுப்பினர் (பதவி வழி)
5. திரு. ஏ.எம். அசங்க தயாரத்ன - உறுப்பினர் (பதவி வழி)
6. விரிவுரையாளர் ஜயசிறி கருணாநாயக்க - உறுப்பினர்
7. வைத்தியர் எம்.எச்.எம். உதித்த பிரபாஷ் ஹேரத் - உறுப்பினர்
8. சட்டத்தரணி தனுஷ்க வெலிகம - உறுப்பினர்

## 2016 ஆகஸ்ட் முதல் 2016 செப்தெம்பர் வரை

| | | |
|---|---|---|
| 1. | பொறி.திரு. எம்.ஏ.பி. ஹேமச்சந்திர | - தலைவர் |
| 2. | சட்டத்தரணி தனுஷ்க வெலிகம | - உறுப்பினர் |
| 3. | திரு. ஏ.எம்.ஆர்.ஜே.கே. ஜயசிங்க | - உறுப்பினர் (பதவி வழி) |
| 4. | திரு. ஆனந்த விஜயரத்ன | - உறுப்பினர் (பதவி வழி) |
| 5. | திரு. ஏ.எம். அசங்க தயாரத்ன | - உறுப்பினர் (பதவி வழி) |

## 2016 ஒக்டோபர் முதல் 2016 திசெம்பர் வரை

| | | |
|---|---|---|
| 1. | பொறி.திரு. எம்.ஏ.பி. ஹேமச்சந்திர | - தலைவர் |
| 2. | பேராசிரியர் ஜே.எம்.எஸ்.ஜே. பண்டார | - உறுப்பினர் |
| 3. | திரு. ஆனந்த விஜயரத்ன | - உறுப்பினர் (பதவி வழி) |
| 4. | திரு. ஏ.எம்.ஆர்.ஜே.கே. ஜயசிங்க | - உறுப்பினர் (பதவி வழி) |
| 5. | திரு. ஏ.எம். அசங்க தயாரத்ன | - உறுப்பினர் (பதவி வழி) |
| 6. | விரிவுரையாளர் தீமந்த டி சில்வா | - உறுப்பினர் |
| 7. | பட்டயப் பொறி. எஸ்.பி.டப்ளியு. ஜயசிறிவர்தன | - உறுப்பினர் |
| 8. | சட்டத்தரணி தனுஷ்க வெலிகம | - உறுப்பினர் |

### சபைக் கூட்டம்

2016ஆம் ஆண்டினுள் நடாத்தப்பட்ட பணிப்பாளர் சபைக் கூட்டங்களின் எண்ணிக்கை 12 ஆகும்.

2016ஆம் ஆண்டினுள் நடாத்தப்பட்ட கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கூட்டங்களின் எண்ணிக்கை 04 ஆகும்.

# தலைவரின் செய்தி



1991 இல 37ஐக் கொண்ட தேசிய போக்குவரத்து ஆணைக்குழச் சட்டத்தின் பிரகாரம் நிறுவப்பட்ட தேசிய போக்குவரத்து ஆணைக்குழு, பொதுப் பயணிகள் போக்குவரத்து சேவைத் தொகுதிக்கு தேவையான நியதிச்சட்ட முறையான பணிகளை வழங்கி தேசிய மட்டத்தில் போக்குவரத்துத் தேவைகளை முறைப்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளைத் திட்டமிடுவதைப் பொறுப்பாகக் கொண்டுள்ளது.

ஒட்டு மொத்தத்தில், நாட்டினை அபிவிருத்தியை நோக்கி இட்டுச்செல்லும் செயற்பாட்டில் போக்குவரத்திற்குள்ள வகிபங்கு மிகவும் விசேடமானது. அதன் பிரகாரம் போக்குவரத்து வலையமைப்பில் காணப்படும் சிறந்த முகாமையானது, பொருளாதார அபிவிருத்தி மற்றும் சமூக மேம்பாடு ஆகியவற்றில் பெரிதும் செல்வாக்குச் செலுத்தும்.

இலங்கை வாழ் பெரும்பாலான மக்களின் போக்குவரத்துத் தேவைகள் பொதுப் பயணிகள் போக்குவரத்து பேருந்துகள் மூலமாகவே நிறைவேற்றப்படுகின்றன. அதனால் சேவையினை முறையாக வழங்கும் நோக்கில் 2016ஆம் ஆண்டில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு பல்வேறு செயற்றிட்டங்கள் பலவற்றைச் செயற்படுத்தியது.

அவற்றினுள் விசேடமாக சமூக நலனை நோக்காகக் கொண்டு பேருந்துச் சேவைகளாகச் செயற்படுத்தப்படும் “சிசு செரிய”, “கெமி செரிய” மற்றும் “நிசி செரிய” ஆகிய செயற்றிட்டங்களுக்குப் பிரத்தியேகமாக முழு பேருந்துப் பயணிகள் போக்குவரத்துத் துறையினதும் மேம்பாட்டிற்காகச் செயற்படுத்தப்படும் செயற்றிட்டங்கள் பல உள்ளன. பாடசாலை மாணவர்களுக்காகவே ஒதுக்கப்பட்ட, அவர்களது உள மற்றும் உடல் ரீதியான கஷ்டங்களின்றி நேரகாலத்துடன் பாடசாலைக்கு செல்லும் மற்றும் பாதுகாப்பாக வீடு திரும்பும் வசதிகளைச் செய்து கொடுக்கும் நோக்குடன் “சிசு செரிய”பேருந்துச் சேவை செயற்றிட்டம், போக்குவரத்து வசதிகளற்ற பிரதேசங்களில் உள்ள மக்களுக்கு தமது நாளாந்த தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு வசதியினை வழங்கும் நோக்கில் “கெமி செரிய” பேருந்துச் சேவை செயற்றிட்டம், இரவு வேளைகளில் மற்றும் அதிகாலையில் பிராந்திய பாதைகளில் பேருந்துச் சேவைகளில் காணப்பட்ட பற்றாக்குறைக்கு ஒரு தீர்வாக “நிசி செரிய” செயற்றிட்டம் ஆகிய செயற்றிட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன.

இலங்கையின் அனைத்து பொதுப் பயணிகளான மக்களுக்கும் நம்பகமான, பாதுகாப்புமிகு, வசதிமிக்க பொதுப் போக்குவரத்துச் சேவையொன்றினை உரிய சேரத்தில் வழங்குவதன் மூலம் பொதுப் பேருந்து பயணிகள் போக்குவரத்துச் சேவையின் தரத்தினை மேம்படுத்துதல் மற்றும் எல்லா பேருந்து ஓட்டுனர்களுக்கும் சம சந்தர்ப்பத்தினை வழங்கும் விதத்தில் விஞ்ஞான ரீதியான ஒன்றிணைந்த சுழல்முறை நேர அட்டவணையைத் தயாரிக்கும் வேலைத்திட்டமும் செயற்படுத்தப்படுகின்றது.

2016ஆம் ஆண்டிலும், வீதிப் பாதுகாப்பு செயற்றிட்டத்தின் கீழ் பாடசாலை மாணவர்கள், பேருந்து உரிமையாளர்கள், ஓட்டுனர்கள், பயணிகள் ஆகியோரை வீதி விபத்துக்களைக் குறைப்பது குறித்து அறிவுறுத்தும் விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் பல நடாத்தப்பட்டதுடன், ஜீபீஎஸ் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதக் மூலம் தொலைவில் இருந்தவாறே வாகனங்களைக் கண்காணிப்பதற்கும் உடனடியாகப் பேருந்துகளை முறைப்படுத்தவும் சாத்தியமாகி உள்ளது.

மேலும், வருடாந்தம் வெளியிடப்படும் "போக்குவரத்துப் புள்ளிவிபரவியல் அறிக்கை", போக்குவரத்துத் துறையில் எழும்பும் பல்வேறு பிரச்சினைகளுக்கான தீர்வுகளைத் தேடுதல், கொள்கையாக்கம், புதிய திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் ஆய்வு நடவடிக்கைகளில் ஈடுபடுவோரின் வசதி கருதி, போக்குவரத்துத் துறைக்குரிய எல்லா தரவுகளையும் ஒன்றுசேர்த்து இவ்வருடத்திலும் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக, தனியார் போக்குவரதது ஊடகங்களைப் பயன்படுத்தும் மக்களைப் பொதுப் பயணிகள் போக்குவரத்துச் சேவையின் பால் ஈர்ப்பதற்கும் பொதுப் பயணிகள் போக்குவரத்துத் துறையின் தரத்தினை விருத்தி செய்வதற்கும், நாட்டில் பல்வேறு சனநெருக்கடியான பிரதேசங்களில் நவீன வசதிகளைக் கொண்ட பேருந்துத் தரிப்பிடங்களை அமைக்கும் செயற்றிட்டமும் வெற்றிகரமாக மேற்கொள்ளப்படுகின்றது. அதன் படி, 2015ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட வவுனியா நகரத்தில் கட்டியெழுப்பப்பட்ட நவீன வசதிகளுடன் கூடிய பேருந்துத் தரிப்பிடம் 2016 திசெம்பர் மாதமாகையில் இரண்டாவது கட்ட பணிகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், 2017 ஜனவரி மாதம் மக்கள்மயப்படுத்தவதற்கு ஏற்பாடாகியுள்ளது.

இதற்கு மேலதிகமாக, மெதகம மற்றும் கிண்ணியா ஆகிய பிரதேசங்களில் 2015ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட புதிய பேருந்து நிலைய நிர்மாணப் பணிகளும் ஏற்கனவே பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

வடமத்திய மாகாணத்தின் பிரதான நகரமான மெதிரிகிரிய மற்றும் ஹிங்குரக்கொட பிரதேசங்களிலும் வட மாகாணத்தில் மிகவும் சனநெருக்கடியான நகரமாகிய யாழ்ப்பாண நகரத்திலும் பெரும் சனத்தொகையினர் வாழும் கிளிநொச்சி நகரத்திலும் பேருந்துத் தரிப்பிடத் தொகுதிகளை நிர்மாணிப்பதற்கு ஆலோசனை செய்யப்பட்டு அமைச்சரவையின் அனுமதியும் கிடைத்துள்ளது. 2016 திசெம்பர் மாதம் இறுதியாகையில் அவற்றின் ஆரம்ப திட்டங்களை தயாரிக்கும் நடவடிக்கைகள் பூர்த்தியடைந்துள்ளன.

இவ்வாறு பல்வேறு துறைகளில் கடமையாற்றும் நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள் அவர்கள் பணிபுரியும் துறைகளில் கோட்பாட்டு ரீதியிலும் செயன்முறை ரீதியிலும் அறிவினை வளர்த்துக் கொள்ளும் நோக்கில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் ஈடுபடுத்தப்பட்டனர்.

இலங்கைப் பொதுப் பயணிகள் போக்குவரதுப் பேருந்துச் சேவையின் தரத்தினைப் பாதுகாத்து, பயணிகளுக்கு நம்பிக்கைமிகு சேவையினை வழங்கும் முயற்சியில் அதற்காக துணை புரியும் கௌரவ போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவை அமைச்சர் அவர்கள், பிரதி அமைச்சர் அவர்கள் மற்றும் செயலாளர் அவர்கள் உட்பட அமைச்சின் பணிக்குழாத்தினருக்கும், தேசிய போக்குவரத்து ஆணைக்குழு பணிப்பாளர் சபை உட்பட அனைத்து பணிக்குழாத்தினருக்கும், எல்லா பேருந்து இயக்குனர்களுக்கும் மற்றும் அவர்களது பணிக்குழாத்தினருக்கும், எல்லாச் சந்தர்ப்பங்களிலும் ஆதரவு வழங்கும் இலங்கைப் பொலீஸின் அனைத்து அதிகாரிகளுக்கும் போக்குவரத்திற்கு சம்பந்தப்பட்ட எல்லா திணைக்களங்களினதும் நிறுவனங்களின் அனைத்து அதிகாரிகளுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**பொறியியலாளர் எம்.ஏ.பி. ஹேமச்சந்திர**

**தலைவர்,**

**தேசிய போக்குவரத்து ஆணைக்குழு**

# மொத்தப் பகுப்பாய்வு

**எமது நோக்கு.......**

***நாட்டினுள் சமூக-பொருளாதார அபிவிருத்தியினை ஏற்படுத்துவதற்காக தரமிக்க, ஆகுசெலவு விளைபயன்மிக்க மற்றும் பாதுகாப்புமிக்க ஒன்றிணைக்கப்பட்ட போக்குவரத்துக் கட்டமைப்பு மற்றும் சேவை ஆகியவற்றின் மூலம் இலங்கையின் எல்லா குடிமக்களினதும் பல்வேறுபட்ட போக்குவரத்துத் தேவைகளைப் பூர்த்திசெய்தலை உறுதிப்படுத்துதல்.***

***எமது பணி.........***

**பயணிகள் போக்குவரத்து தொடர்பான தேசிய கொள்கைக் குறித்து இலங்கை அரசிற்கு ஆலோசனை வழங்குதல் மற்றும் பொதுமக்களின் போக்குவரத்துத் தேவைகளை நிறைவேற்றும் திறன்மிகு பஸ் போக்குவரத்து முறைமையை உறுதிப்படுத்துவதற்கு தேவையான ஒழுங்குபடுத்தற் சட்டகத்தை உருவாக்குதல்**

**எமது இலக்குகளும் / குறிக்கோள்களும்**

- ☐ பேருந்துச் சேவையின் அபிவிருத்தி நடவடிக்கைகளை தரம் மிக்கதாகவும் போதிய அளவானதாகவும் உயர் மட்டத்தில் தொடர்ந்தும் பேணுதல்.
- ☐ வினைத்திறன்மிக்க போக்குவரத்து முறைமை ஒன்றினை அபிவிருத்தி செய்தல்
- ☐ தங்களுக்கு மிகவும் பொருத்தமான பேருந்துச் சேவையைத் தெரிவு செய்வதற்கு உதவும் விதத்தில் போக்குவரத்து முறைமை ஒன்றை அபிவிருத்தி செய்தல்
- ☐ பிரயாணிகள் போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டுள்ள செயற்பாட்டாளர்களின் உறுதிப்பாடு மற்றும் நிலைப்பாட்டினை உறுதி செய்தல்
- ☐ கிராமப்புற மற்றும் அபிவிருத்தி அடைந்து வரும் பிரதேசங்களில் செயற்படுத்தப்படும் குறைந்த வருமானம் ஈட்டும் ஆனால் சமூக ரீதியில் பேருந்துச் சேவை அவசியமான பேருந்துச் சேவைகளுக்கு நிதி உதவி அளித்தல்
- ☐ பயணிகள் போக்குவரத்துப் பேருந்துச் சேவைகள் மூலம் ஏற்படும் சுற்றாடல் பாதிப்பைத் தடுப்பதற்கான ஒரு வழிமுறையினைத் திட்டமிட்டு அதனை அபிவிருத்தி செய்தல்
- ☐ பேருந்து இயங்கும் நேரத்தை ஒழுங்கமைப்பதன் மூலம் பேருந்துகளின் விளைபயனை அதிகரித்தல்
- ☐ பேருந்துகளை இயக்கும் வேளையில் பாதுகாப்பையும் ஒழுங்கையும் உறுதி செய்தல்
- ☐ மாகாணங்களுக்கிடையில் மற்றும் மாகாணச் சேவையில் ஈடுபடும் பேருந்து சேவைகளின் இயக்கமுறைமைகளை ஒருங்கிணைத்தல்
- ☐ நாட்டின் மொத்த உழைப்புத் திறனை மேம்படுத்துதல்

## ஆணைக்குழுவின் அமைப்பு

ஆணைக்குழு மூன்று பதவிவழி அங்கத்தவர்களையும் அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் போக்குவரத்து அமைச்சரினால் நியமிக்கப்பட்ட மேலும் ஐந்து அங்கத்தவர்களையும் கொண்டுள்ளது. ஆணைக்குழு ஒழுங்குசார் கட்டமைப்பு தலைவர், பணிப்பாளர் நாயகம் மற்றும் திட்டமிடல், இயக்கம் மற்றும் சேவைகள் கண்காணிப்பு, தர உறுதிப்பாடு, வெளியார் தொடர்பு, நிதி மற்றும் கொள்வனவு ஆகிய 4 திணைக்களங்களுக்குப் பொறுப்பாகச் செயற்படும் பணிப்பாளர்கள் நால்வரையும் கொண்டது.

2015ஆம் ஆண்டின் இறுதியில் ஆணைக்குழுவின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 198 ஆக இருந்ததுடன், சேவையில் ஈடுபட்டுள்ள நிரந்தரப் பணியாளர்களின் எண்ணிக்கை 167 ஆகும்.

### 2016.12.31 ஆந் திகதியில் உள்ளவாறான தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் ஊழியர் எண்ணிக்கை

| பணியாளர் தொகுதி | அங்கீகரிக்கப்பட்ட பணியணி | சேவையில் ஈடுபட்டிருந்த பதவியணியினர் |
|---|---|---|
| PL - 1 | 29 | 22 |
| PL - 3 | 13 | 17 |
| MA- 1.1 | 75 | 57 |
| MA- 2.1 | 03 | 00 |
| MA- 4 | 36 | 36 |
| JM - 1.1 | 20 | 18 |
| MM - 1.1 | 17 | 13 |
| HM - 1.1 | 04 | 03 |
| HM- 2.1 | 01 | 01 |
| மொத்தம் | 198 | 167 |

மூலம் - நிர்வாகத் திணைக்களம் - தேபோஆ

# 2016ஆம் ஆண்டின் செயலாற்றுகை

## 1. சமூக நலன்களை முதன்மைப் படுத்திய பேருந்துச் சேவைகளை வழங்குதல

### 1.1 பாடசாலைப் பேருந்துச் சேவை செயற்றிட்டம் “சிசு செரிய”






தொலைவில் உள்ள கிராமப்புறங்களில் இருந்து நகரப் பகுதியை அண்டிய பிரசித்தமான பாடசாலைகளுக்கு நகரும் மாணவச் சமூகம் படிப்படியாக அதிகரித்து வரும் போக்கு காணப்படுவதுடன், அவர்களது போக்குவரத்துத் தேவையினைப் பூர்த்தி செய்வது முறைப்படுத்தப்படாமையால் காலையிலும் பகலிலும் நகரப்பகுதிகளில் போக்குவரத்துப் பிரச்சினைகள் பல ஏற்படலாயிற்று. இப்பாடசாலை சிறார்களை ஏற்றி வரும் மோட்டார் வண்டிகள் மற்றும் பெரிய, சிறிய வேன் வண்டிகளின் காரணமாக நகரப்பகுதிகளில் வீதிகளில் ஏற்படும் நெருக்கடி முக்கியமான பிரச்சினையாகும். இதற்கு மேலதிகமாக, அதிக பணத்தைச் செலுத்தி பிள்ளைகளின் பாதுகாப்பு அல்லது வசதி குறித்து எவ்வித தரநியமங்களுமற்ற தனியார் போக்குவரத்து ஊடகங்களைப் பயன்படுத்துவதற்கு பெற்றோர் ஆளாகுகின்றனர். இவ்வாறான பின்னணியில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் எடுக்கப்பட்ட காலத்தின் தேவையான, முக்கியமான வழிமுறையாக பாடசாலை மாணவர்களுக்காகவே ஒதுக்கப்பட்ட பேருந்துச் சேவையான “சிசு செரிய” பாடசாலை பேருந்துச் செயற்றிட்டத்தினைக் குறிப்பிடலாம்.

இச்செயற்றிட்டத்தின் கீழ், பள்ளிக்கூட பிள்ளைகள் உள ரீதியாக எவ்வித இடைஞ்சலுமின்றி நேரத்துக்கு பாடசாலைக்கு சென்று கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டு, பாதுகாப்பாக வீடு திரும்பக்கூடிய வசதியினை ஏற்படுத்திக் கொடுப்பதே இச்செயற்றிட்டத்தின் முக்கிய நோக்காகும். மேலும், சலுகைக் கட்டண முறை நடைமுறைப்படுத்தப்படுவதால், பெற்றோர்களின் பொருளாதார இடரைத் தணித்தல், பாதுகாப்பு மற்றும் முறையான தன்மை மூலம் சிறுவர் துஷ்பிரயோகத்தினைக் குறைத்துக் கொள்ளல் இச்செயற்றிட்டத்தின் ஏனைய நோக்கங்களாகும். இலங்கைப் போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் பேருந்துகள் மூலம் இச்செயற்றிட்டத்திற்கு சேவைகள் பெற்றுக் கொள்ளப்படும். இச்சேவையின் போது மாணவர்களிடமிருந்து குறிப்பிட்ட கட்டணத்தின் 50மூ வீதம் சலுகைக் கட்டணமாக அறவிடப்படுவதுடன், பேருந்து இயக்குனர்களின் இழக்கும் வருமானத்தின் பொருட்டு தேசிய போக்குவரத்து ஆணைக்குழு ஏற்கனவெ இணங்கப்பட்ட கட்டண அளவின் படி பின்னர் மீள்நிரப்பி சேவைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2016.12.31ஆந் திகதியாகையில் செயற்படுத்தப்படும் சிசு செரிய சேவைகள் எண்ணிக்கை மற்றும் ஒவ்வெரு மாணத்திற்குமான சேவைகளை வழங்குவதற்கு மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவு கீழ்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

| மாகாணம் | சிசு செரிய பேருந்துகளின் எண்ணிக்கை | சேவையினை வழங்குவதற்கான கொடுப்பனவு (மி.ரூபா) |
|---|---|---|
| மேல் | 417 | 124.20 |
| வடமேல் | 247 | 102.06 |
| வடமத்திய | 138 | 76.68 |
| தென் | 111 | 26.19 |
| சப்பிரகமுவா | 124 | 25.47 |
| ஊவா | 71 | 22.82 |
| கிழக்கு | 112 | 47.92 |
| மத்திய | 46 | 20.85 |
| வட | 23 | 7.91 |
| மாகாணங்களுக்கு இடையில் | 10 | (உரிய மாகாணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.) |
| **மொத்தம்** | **1299** | **454.13** |

மூலம்- திட்டமிடல் திணைக்களம், தேபோஆ

பாடசாலைப் போக்குவரத்துச் சேவைகளில் காணப்பட்ட முறையற்ற தன்மை, கொழும்பு நகரத்தினுள் எல்லா பாடசாலை நாட்களிலும் காலை வேளையிலும் பகல் வேளையிலும் கொழும்புப் பாதைகளில் கடும் வாகன நெருக்கடி காணப்பட்டது. மேலும், நாட்டின் ஏனைய நகர்ப்புறப் பிரதேசங்களிலும் இது பெரும் சிக்கலை ஏற்படுத்தியிருந்ததுடன், அவ்வாகனங்களை நிறுத்திவைப்பதற்கு தரிப்பிட வசதிகள் முறையான வழிமுறைகள் இல்லாமையால், பாடசாலைகளுக்கு அருகில் வாகன நெருக்கடி உருவாகுதல் பெரும் சிக்கலை ஏற்படுத்தியிருந்தது.

“சிசு செரிய” செயற்றிட்டத்தின் கீழ் குறைந்த பட்சம் 42 ஆசனங்களைக் கொண்ட பேருந்துகளை ஈடுபடுத்துவது காட்டாயமாவதுடன், அதன் மூலம் நகர்ப்புறப் பிரதேசங்களில் காலை வேளையிலும் மாலை வேளைகளிலும் காணப்படும் வாகன நெருக்கடியினைக் குறைப்பதற்கு வழியேற்பட்டுள்ளது. அதன் மூலம் சிறிய தனியார் வாகனங்கள் மூலம் மேற்கொள்ளப்படும் பாடசாலைக்கான பயணிக்கும் தடவைகளைக் குறைப்பதும் எரிபொருள் பாவனையைக் குறைப்பதும் வாகனங்களில் இருந்து வெளியேறும் புகையினால் ஏற்படும் சூழல் மாசுறலைக் குறைப்பதும் செயற்படுத்தப்படுகின்றன.

2016ஆம் ஆண்டு இறுதியாகையில் சிசு செரிய சேவைகளின் எண்ணிக்கை 1299 வரை வளர்ச்சி அடைந்துள்ளதுடன், இலங்கைப் போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் துறையின் பங்களிப்பு மூலம் இப்பேருந்துச் சேவைகளை வெற்றிகரமாகச் செயற்படுத்துவதற்கு முடிந்துள்ளது. இச்செயற்றிட்டம் பாடசாலை ஆசிரியர்களினதும், பாடசாலைச் சிறார்களினதும், பெற்றோர்களினதும் பெரும் பாராட்டுதல்களுக்கு பாத்திரமாகியுள்ள சிறந்த சமூக சேவையாக மாறியுள்ளது.

2016 ஆம் ஆண்டினுள் இதன் தொடர்பில் செலவிடப்பட்ட தொகை 454.13 மில்லியன் ரூபா ஆகும்.

## 1.2 கிராமிய பேருந்துச் சேவைச் செயற்றிட்டம் - “கெமி செரிய”



“கெமி செரிய” கிராமிய பேருந்துச் சேவை

உரிய போக்குவரத்து வசதிகள் இல்லாத கிராமத்தில் வாழும் மக்களுக்கு போதிய போக்குவரத்து வசதிகளைப் பெற்றுக் கொடுப்பது உரிய அதிகாரிகளின் பொறுப்பெனினும், தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அப்பணிக்கு உதவியாக கிராமம் நகரத்தை விட்டும் தூரமாவதைத் தவிர்ப்பதற்காக “கெமி செரிய” என்ற பெயரில் கிராமப்புற பேருந்துச் சேவை செயற்றிட்டம் 2005 ஆம் ஆண்டில் ஆரம்பித்து இன்று வரை தொடர்ச்சியாக மேற்கொள்வதன் மூலம் நம்பகமாக மற்றும் இலாபகரமானதாக சேவையொன்றினை கிராமப்புற மக்களுக்கு வழங்குகின்றது.

2016.12.31ஆந் திகதியில் செயற்படுத்தப்படும் கெமிசெரிய சேவைகள் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

| தொ.இல. | மாகாணம் | கெமி செரிய பேருந்துகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | தென் | 2 |
| 2 | கிழக்கு | 6 |
| 3 | வடமேல் | 2 |
| | **மொத்தம்** | **10** |

கெமி செரிய பேருந்துச் சேவைக்காக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் சேவையினை ஆரம்பித்து 3 வருடங்கள் வரை மாத்திரமே ஏற்பாடுகள் வழங்கப்படுவதுடன், அம்மூன்று வருட இறுதியில் கொடுப்பனவு நிறுத்தப்படும. 3 வருடங்களின் பின்னர் ஈட்டும் வருமானத்தினைக் கொண்டு சேவையினை மேற்கொண்டுச் செல்ல முடியுமான மட்டத்தினை அடைவதால், அந்நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளதுடன், குறிப்பிட்ட சேவைக்காக வழங்கப்பட்ட ஏற்பாட்டினை வேறொரு கெமிசெரிய சேவை ஒன்றினை ஆரம்பிப்பதற்காக வழங்குவதற்கு ஆணைக்குழு நடவடிக்கை எடுக்கும். அதன்படி, 2016 திசெம்பர் 31ஆந் திகதியாகையில் உதவித்தொகை பெறும் சேவைகளின் எண்ணிக்கை 10ஆக இருப்பினும், தொடக்கத்தில் இருந்து இது வரை தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் அறிமுகப்படுத்தப்பட்ட கெமி செரிய பேருந்துச் சேவைகளில் பெரும் எண்ணிக்கையானவை தற்போது பிரபலமான பேருந்துச் சேவைகளாக மாறியுள்ளன.

2016ஆம் ஆண்டின் போது இதற்காக செலவிடப்பட்ட தொகை 3.72 மி. ரூபாவாகும்.

### 1.3 இரவு நேர பேருந்து சேவை செயற்றிட்டம் - "நிசி செரிய"

இலங்கையின் பல பிரதேசங்களில், பிரதான பாதைகள் தவிர்ந்த் பல உட்பாதைகளில் இரவு வேளையில் பொதுப் பேருந்துச் சேவைகளை வழங்குகை மிகவும் கீழ் மட்டத்தில் காணப்படுகின்றது. அதனால், தூரப் பிரதேசங்களிலிருந்து தினமும் நகரை நோக்கிச் சென்று தமது உடல் உழைப்பினைப் பெற்றுக் கொடுக்கும் அநேகமானோர் அதிகாலையில் வீட்டிலிருந்து புறப்பட்டு இரவு வேளையில் விடு திரும்புவர். எனினும் அவர்களது அடிப்படைத் தேவையாக மாறியுள்ள போக்குவரத்துச் சேவை உரிய நேரத்தில் கிடைக்காமை அவர்கள் தைரியம் இழப்பதற்கு ஏதுவாக உள்ளது. அதனால் அப்பயணிக்கும் மக்கள் முகங்கொடுக்க வேண்டிய கடும் இடைஞ்சலைக் கவனத்திற் கொண்டு தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் "நிசி செரிய" செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டது.



"நிசி செரிய" இரவு நேரப் பேருந்துச் சேவை

இச்செயற்றிட்டத்தின் அடிப்படை நோக்கானது இரவின் கடைசி பயணமுறை மற்றும் அதிகாலையில் முதல் பயணமுறைக்காகப் பொதுப் பேருந்துச் சேவையினை ஈடுபடுத்தி பயணிகள் மிகவும் நம்பகமாக மற்றும் பாதுகாப்பாகத் தமது பயணத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு தேவையான வசதிகளை வழங்குவதாகும். 2016.12.31 ஆகையில் செயற்படுத்தப்படும் நிசி செரிய சேவைகளின் எண்ணிக்கை பின்வருமாறு.

| மாகாணம் | சேவைகளின் எண்ணிக்கை |
|---|---|
| மேல் | 52 |
| தென் | 15 |
| ஊவா | 7 |
| மத்திய | 20 |
| வடமத்திய | 11 |
| வடமேல் | 12 |
| சப்பிரகமுவா | 3 |
| கிழக்கு | 3 |
| மொத்தம் | 123 |

மூலம்- திட்டமிடல் திணைக்களம், தேபோஆ

தூரப்பிரதேசங்களில் "நிசி செரிய" செயற்றிட்டத்தினை செயற்படுத்தும் போது பல்வேறு பிரச்சினைகள் எழும்பியுள்ளதுடன், விசேடமாக நடுநிசியில் மற்றும் அதிகாலையில் பேருந்தச் சேவைகளை மேற்பார்வை செய்வது கடனமான ஒரு காரியமாக உள்ளது. எனினும் அதற்கு தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின்

அலுவலர்களை ஈடுபடுத்தி, அவர்கள் அடிக்கடி அப்பேருந்துச் சேவைகளைப் பரிசோதித்து அவற்றின் ஓட்ட நடவடிக்கைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படுவதற்கு கடும் அர்ப்பணிப்புடன் செயலாற்றுகின்றனர்.

2016ஆம் ஆண்டின் போது இதற்காக செலவிடப்பட்ட தொகை 9.82 மி. ரூபாவாகும்.

## 2. நேர அட்டவணைகளைத் தயாரித்தல் மற்றும் திருத்தி அமைத்தல்

எல்லா பேருந்து ஓட்டுனர்களுக்கும் சம சந்தர்ப்பத்தினை வழங்கும் விதத்தில் பயண நேர அட்டவணைகளைத் தயாரித்து, ஓட்டுனர்களின் வியாபார நிலைப்பாட்டினைப் பாதுகாப்பதற்கும் அரச மற்றும் தனியார் பிரிவின் பேருந்து ஓட்டுனர்களுக்கு இடையிலான பாதகமான போட்டித் தன்மையினைக் குறைப்பதற்கும் அதன் மூலம் பயணிக்கும் மக்களுக்கு நம்பகமானதும் பாதுகாப்பானதுமான உயர் தரமிக்க பொதுப் பேருந்துச் சேவையினை வழங்குவது இச்செயற்றிட்டத்தின் அடிப்படை நோக்கங்களாகும். இதற்கு மேலதிகமாக, பேருந்து ஒன்று சாதாரணமாக ஒரு நாளைக்கு ஓடும் கிலோ மீற்றர் அளவினை(சாதாரண வாகனப் பாவனை) உச்சப்படுத்துதல் இச்செயற்றிட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுவதுடன், நகர நெருக்கடியினைக் குறைத்தல், சூழல் மாசடைவினைக் குறைத்தல், பயணிகளின் கேள்விகளுக்கு பொருந்தும் வகையில் பேருந்து வழங்குகையைப் பேணுதல் என்பன ஏனைய நோக்கங்களாகும்.

இபோச மற்றும் தனியார் பேருந்துகளுக்கான ஒன்றிணைந்த நேர அட்டவணைகளைத் தயாரிப்பதற்கான இலங்கைப் போக்குவரத்துச் சபையிடமிருந்து கிடைக்கும் பங்கு குறைதல், ஒன்றிணைந்த நேர அட்டவணைகளைச் செயற்படுத்துவதற்கு பொது பேருந்துத் தரிப்பிட வசதிகள் இல்லாமை என்பன இச்செயற்றிட்டம் வெற்றிபெறுவது குறைவடைவதற்கு ஏதுவாகின்றன. அதனால் இபோச ஒன்றிணைந்த நேர அட்டவணைகளின் படி பேருந்துகள் பயணிப்பதற்கு இணங்கும் வரையில் தனியார் பேருந்துகளுக்காக மாத்திரம் சுழல்முறை நேர அட்டவணைகளைத் தயாரிப்பதற்கு தேசிய போக்குவரத்துச் சபை தீர்மானித்துள்ளது.

2016 திசெம்பர் 31ஆந் திகதியாகையில் மாகாணங்களுக்கு இடையிலான 236 பேருந்துப் பயணப் பாதைகளில் மற்றும் 1705 பேருந்துகளில் சுழல்முறை நேர அட்டவணை தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டுள்ளது.

2016.12.31 ஆந் திகதி வரையில் மேற்கொள்ளப்படட் செலவு 2.02 மி. ரூபா ஆகும்.

## 3. பேருந்து ஊழியர் குழுவினரை பதிவுசெய்தலும் பயிற்சி அளித்தலும்

மாகாணங்களுக்கு இடையிலான பொதுப் பயணிகள் போக்குவரத்து தனியார் பேருந்துகளில் பணியில் ஈடுபட்டிருக்கும் சாரதிகளும் நடத்துனர்களும் தமது பேருந்துகளில் பயணிக்கும் பயணிகளின் நம்பிக்கை மற்றும் மதிப்பினைப் பெற்றுக் கொண்டு மகிழ்ச்சிகரமான சேவையொன்றினைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் இச்செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டது. பேருந்துகளில் அவர்களது நடத்தை மற்றும் நடத்தைக் கோலங்கள் குறித்து சமூகத்தில் காணப்படும் பிழையான கருத்தினை இல்லாதொழித்து அவர்கள் தொடர்பில் நல்ல மனப்பாங்கினை சமூகமயமாக்குவதே இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், மாகாணங்களுக்கு இடையிலான பேருந்துகளில் பணியில் ஈடுபட்டிருக்கும் சாரதிகளினதும் நடத்துனர்களினதும் பணியினை தொழில்வாண்மை மிக்கதாக ஆக்குதல் மற்றும் ஒழுக்க மட்டத்தினை மேம்படுத்துதல் பொருட்டு விசேட பயிற்சி நிகழ்ச்சிகள் இதன் கீழ் செயற்படுகின்றன. இப்பயிற்சி நிகழ்ச்சிகள் நாட்டில் உள்ள போதனாசிரியர்களால் மேற்கொள்ளப்படுவதுடன், பாடநெறியினை வெற்றிகரமாக நிறைவு செய்பவர்களுக்கு விசேட சாரதி.˙. நடத்துனர் அடையாள அட்டை ஒன்றை வழங்குவதும் இச்செயற்றிட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகிறது.

எனினும், பேருந்து உரிமையாளர்களின் தமது விருப்பப்படி தகுதிப் பரீட்சையோ அல்லது வேறு ஏதேனும் நியமங்கள் இன்றி பேருந்துகளில் சாரதிகளையும் நடத்துனர்களையும் சேவையில் ஈடுபடுத்துதல், இத்துறையில் பயிற்சி பெற்று நுழைபவர்கள் இத்தொழிலில் தங்கியிராமை ஆகிய காரணங்களால் இம்முயற்சியில் உரிய பெறுபேற்றினைக் காண்பது பெரும் சவாலாகக் காணப்படுகின்றது.

2016 ஆம் ஆண்டினுள் பயிற்சி நிகழ்ச்சிகளில் மாதாந்தம் ஈடுபடுத்தப்பட்ட சாரதிகள் மற்றும் நடத்துனர்களின் எண்ணிக்கை கீழ்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.





| மாதம் | முதன்முதலாகப் பயிற்சிப் பெற்றோர் | | மீளப் பயிற்சிப் பெற்றோர் | |
|---|---|---|---|---|
| | சாரதிகள் | நடத்துனர்கள் | சாரதிகள் | நடத்துனர்கள் |
| ஜனவரி | 67 | 47 | 9 | 11 |
| பெப்ரவரி | 40 | 133 | - | - |
| மார்ச் | 72 | 57 | 10 | 9 |
| ஏப்பிரல் | 77 | 49 | 6 | 12 |
| மே | 60 | - | 6 | 15 |
| ஜூன் | 65 | 53 | 7 | 16 |
| ஜூலை | 58 | 37 | 12 | 16 |
| ஆகஸ்ட் | 3 | 49 | 23 | 31 |
| செப்தெம்பர் | 82 | 50 | 4 | 2 |
| ஒக்தோபர் | 101 | 56 | - | - |
| நவம்பர் | | 54 | 30 | 29 |
| திசெம்பர் | 83 | 50 | 26 | 37 |
| மொத்தம் | 708 | 635 | 133 | 178 |

மூலம் - தரப்பாதுகாப்புத் திணைக்களம், தேபோஆ

2016ஆம் ஆண்டு இறுதியாகையில் 841 சாரதிகளுக்கும் 813 நடத்துனர்களுக்கும் மீண்டும் என 1654 பேருக்கு பயிற்சி அளித்து அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக பயிற்சி பெற்ற எல்லா சாரதிகளுக்கும் நடத்துனர்களுக்கும் சீருடைகளும் வழங்கப்பட்டன.

2016 ஆம் ஆண்டில் திசெம்பர் 31ஆந் திகதிக்கு 24 சாரதி.'. நடத்துனர் பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டுள்ளதுடன், அதற்கான திரண்ட செலவு 2.36 மி.ரூபா ஆகும்.

## 4. பேருந்துக் கட்டண ஒழுங்கீனங்களை நீக்குதல்

2002 ஆம் ஆண்டில் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட பேருந்துக் கட்டணக் கொள்கையின் சிபாரிசுக்கமைய பேருந்துக் கட்டண ஒழுங்கீனங்களை நீக்கும் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டது. தற்போது பாவனையில் இருக்கும் கட்டண அட்டவணை பொதுப் பிரமாணங்கள் மற்றும் விஞ்ஞான ரீதியான வழிமுறைகளுக்கு அமைய தயாரிக்கப்பட்டு இல்லாமையால் மற்றும் மையப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றினால் கட்டண அட்டவணை தொகுக்கப்பட்டிராமையால் கட்டண அட்டவணையில் பல்வேறு ஒழுங்கீனங்களைக் காணமுடிந்தது. அதனால், வேறுபட்ட பயணவழிகளில் சமமான தூரத்தினைக் கடக்கும் பயணிகளிடமிருந்து

வேறுபட்ட கட்டணங்கள் அறவிடப்பட்டுள்ளதுடன், ஒரே பயணவழியில் ஓடும் இ.போ.ச. மற்றும் தனியார் பேருந்துகளிலும் மாகாணங்களுக்கு இடையிலான பேருந்துகளிலும் பல்வேறு கட்டணங்கள் அறவிடப்பட்டுள்ளன. குறிக்கப்பட்ட கட்டண அட்டவணை இல்லாமையால் பேருந்து பயணிகளுக்கும் பேருந்து ஊழியர்களுக்கும் இடையில் அடிக்கடி முரண்பாடுகள் ஏற்பட்டன.

பேருந்துப் பயணிகள் பயணிக்கும் தூரத்திற்கு ஒப்பாக கட்டணமொன்றை அறவிடும் நோக்கில் மற்றும் கட்டண சந்தர்ப்பங்களை குறிப்பிட்ட நியமங்களின் கீழ் நிறுவும் நோக்குடன் பேருந்துக் கட்டணக் கொள்கை மூலம் கட்டணச் சந்தர்ப்பமொன்றிற்கான சாதாரண தூர அளவு பரிந்துரைக்கப்பட்டது. அதன்படி, தட்டையான தரை பாதையில் கட்டணச் சந்தர்ப்பமொன்றிற்கான சாதாரண தூரம் 2 கி.மீ. ஆகவும் மலைநாட்டுப் பாதையில் கட்டண சந்தர்ப்பமொன்றிற்கான சாதாரண தூரம் 1.7 கி.மீ. ஆகவும் நாட்டின் எல்லா பேருந்து பயணவழிகளும் அளவிடப்பட்டு கட்டணச் சந்தர்ப்பங்களை நிறுவுவதற்கு சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. அப்பரிந்துரையினைச் செயற்படுத்தும் நோக்கில் இச்செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டதுடன், 2011ஆம் ஆண்டு இறுதியாகையில் எல்லா மாகாணங்களுக்கு இடையிலான பாதைகள் மற்றும் மேல், மத்திய, தென், வடமேல் மாகாணங்களுக்குரிய மாகாணப் பாதைகளில் காணப்படும் ஒழுங்கீனங்களை நீக்கி, தரப்படுத்தப்பட்ட கட்டண அட்டவணைகள் செயற்படுத்தப்பட்டன. 2012ஆம் ஆண்டு முடிவடையும் போது கிழக்கு மாகாணத்திற்குரிய எல்லா பேருந்து பயண வழிகளும் அளவிடப்பட்டு 300 பாதைகளுக்கு தரப்படுத்தப்பட்ட கட்டண அட்டவணைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. அவ்வாறே 2015ஆம் ஆண்டு இறுதியாகையில், மகாணங்களுக்கு இடையிலான 400 பாதைகளும், மேல் மாகாணத்தில் 780 பாதைகளும் மத்திய மாகாணத்தில் 783 பாதைகளும் தென் மாகாணத்தில் 388 பாதைகளும் வடமேல் மாகாணத்தில் 366 பாதைகளும் சப்பிரகமுவா மாகாணத்தில் 574 பாதைகளும் ஊவா மாகாணத்தில் 480 பாதைகளும் அளவிடப்பட்டு தரப்படுத்தப்பட்ட கட்டணங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

2016 திசெம்பர் 31ஆந் திகதியில் 0.02 மி. ரூபா தொகை செலவு இச்செயற்றிட்டத்திற்காக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 5. வீதிப் பாதுகாப்புத் தொடர்பில் விழிப்பூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள்



வீதிப்பாதுகாப்புச் செயலமர்வில் கலந்து கொண்ட மாணவர்கள்



சித்தரப் போட்டி நடைபெற்ற சந்தர்ப்பம்

எமது நாட்டில் அன்றாடம் நடைபெறும் வீதி விபத்துக்களை நோக்குகையில் சாரதிகளின் கவனயீனமான வாகன ஓட்டுகை மற்றும் வீதியினைப் பயன்படுத்துகையில் பாதசாரிகளின் பதற்றமான நடத்தை ஆகிய இரண்டுமே ஏதுவாக இருப்பதைக் காணலாம். வீதி விபத்துக்களைக் குறைப்பதாயின், வீதி விபத்துக்களால் இழக்க நேரிடும் உயிர்கள் மற்றும் சொத்துக்களின் பெறுமதி தொடர்பில் இரு தரப்பினரும் உரிய முறையில் அறிவுறுத்தப்பட்டு மனப்பாங்கினை விருத்தி செய்வதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். தற்போது அவ்வாறாயினும் எதிர்காலத்தில் முகங் கொடுக்கக் கூடிய கவலைக்கிடமான நிலைமை குறித்து புரிந்து கொண்ட தேசிய போக்குவரத்து ஆணைக்குழு, பொது மக்கள் சமூகத்தினுள் பிரவேசிக்கத் தயாராகும் ஆரம்ப மக்கள் குழுவினரான பாடசாலைச் சிறார்களைக் கவனத்திற் கொள்வது இச்செயற்றிட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும். முதலில் இம்மாணவச் சமூகத்தினை பதற்றமான கட்டுப்பாடற்ற நிலையிலிருந்து மீட்டு

சுயபுத்தியுடன் வீதியினைப் பயன்படுத்துவதற்குப் பயிற்றுவித்தல் இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

அதன்படி, நாட்டின் அனைத்து பாடசாலைகளிலும் போக்குவரத்தினை ஒழுங்கமைக்கும் பாடசாலை சிறார்களுக்காக விசேட நிகழ்ச்சித்திட்டமொன்று செயற்படுத்தப்படுகின்றது. இதன் மூலம் போக்குவரத்தினை ஒழுங்கமைக்கும் சிறார்களுக்கு வீதிப் பாதுகாப்பு குறித்து விபரமான அறிவினைப் பெற்றுக் கொடுத்து அப்பிள்ளைகளினூடாக பாடசாலையின் ஏனைய பிள்ளைகளையும் அறிவுறுத்துவது எதிர்பார்க்கப்படுகின்றது.

2016ஆம் ஆண்டில் வீதிப் பாதுகாப்பு குறித்து 06 செயலமர்வுகள் கம்ப, குருணாகலை, மினுவங்கொடை, ஹோமாகமை, அனுராதபுரம் ஆகிய வலயங்களில் நடாத்தப்பட்டதுடன், அதற்கு இணைவாக விஜய பத்திரிகைக் கம்பனியின் அனுசரணையின் கீழ் வடமத்திய மாகாணத்தின் பாடசாலைச் சிறார்களுக்கிடையில் சித்திரப் போட்டியொன்று நடாத்தப்பட்டு வெற்றியாளர்களுக்கு பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. 150 பாடசாலைகளைப் பிரதிநிதித்துவம் செய்யும் விதத்தில் ஏறக்குறைய 3750 மாணவர்கள் இப்பயிற்சி நிகழ்ச்சிகளில் பங்கேற்றனர்.

2016ஆம் ஆண்டின் போது இதற்காக செலவிடப்பட்ட தொகை 1.84 மி. ரூபாவாகும்.

## 6. தனியார் பேருந்துச் சேவைகளை மீளமைத்தல்

### 6.1 பேருந்துத் தரிப்பிடங்களை அமைத்தல்

தனியார் போக்குவரத்து ஊடகங்களைப் பயன்படுத்தும் இலங்கை மக்கள் சமூகத்தின் ஆர்வம் படிப்படியாக அதிகரிப்பது, ஒவ்வொரு போக்குவரத்து ஊடகங்களுக்குக் காணப்படும் துறைசார் பங்களிப்பு தொடர்பிலான கடந்த சில வருடங்களின் தரவுகளை ஒப்பிடும் போது தெளிவாகின்றது. தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் தொகுக்கப்பட்டுள்ள "தேசிய போக்குவரத்து புள்ளிவிபர அறிக்கை 2016" இன் படி கடந்த 15 வருட காலத்தினுள் காட்டப்பட்டுள்ள "வாகனத் தொகை வளர்ச்சி வேகம்" என்பதற்கிணங்க முச்சக்கர வண்டிகளின் எண்ணிக்கையில் துரித வளர்ச்சி வேகத்தினைக் காட்டுவதுடன், பேருந்துகளுக்கான வளர்ச்சி வேகம் குறைவாகவே உள்ளது. அதாவது பொதுப் போக்குவரத்துச் சேவையின் துறைசார் பங்களிப்பு படிப்படியாகக் குறைவடைவதுடன், தனியார் போக்குவரத்து ஊடகங்களின் துறைசார் பங்களிப்பு அதற்கு நேர்மாறாக அதிகரித்துச் செல்வதை அத்தரவுகள் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. இதன் விளைவாக, நகர்ப்புறப் பாதைகளில் ஏற்படும் வாகன நெரிசல், அதற்குள் அகப்படும் மக்களின் உடல், உள அழுத்தங்களின் காரணமாக அவர்களின் விளைபயன் குறைவடைதல் என்பன அபிவிருத்தியின் பின்னடைவில் கடுமையான பாதிப்பை ஏற்படுத்துவதால், பெரும்பான்மையான மக்களை பொதுப் போக்குவரத்துச் சேவையின் பால் எவ்வாறெனினும் ஈர்த்துக் கொள்ளும் சவாலைத் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு முகங்கொடுக்க வேண்டியுள்ளது.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் அச்சவாலினை எதிர்கொள்வதற்கு பெரும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு செயற்றிட்டங்கள் பல ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் பொதுப் பயணிகள் போக்குவரத்துச் சேவையின் தரத்தினை விருத்தி செய்யும் நோக்கில் அதற்குரிய உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்யும் பணித் திட்டமொன்று செயற்படுத்தப்பட்டுள்ளது. அதன் படி, சமூகத்தில் ஒவ்வொரு மட்டத்திற்கும் பொருத்தமாகும் விதத்தில் புதிய பயணிகள் பேருந்துத் தரிப்பிடங்களை நாட்டில் பல்வேறு பிரதேசங்களில் அமைத்தல் மேற்கொள்ளப்படுகின்றது. அவ்வப்பிரதேசங்களுக்கு பொருந்தக் கூடிய விதத்தில பேருந்துகளை நிறுத்தும் வசதிகள், பயணிகளுக்கான வசதிகள் கண்கவர் சுற்றுச்சூழலைக் கொண்டதாக இப்புதிய பேருந்துத் தரிப்பிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

### 6.1.1. வவுனியா பேருந்துத் தரிப்பிடத்தை அமைத்தல்



மக்கள்மயப்படுத்தவதற்கு தயாராகவுள்ள வவுனிய பேருந்துத் தரிப்பிடம்

விவசாய ஆராய்ச்சி நிலையத்தினால் வழங்கப்பட்ட மூன்று ஏக்கர் காணியில் மிகவும் அழகான முறையில் அமைக்கப்பட்டுள்ள வவுனியா பேருந்துத் தரிப்பிடம், 2014 ஜனவரி 31ஆந் திகதி நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு தற்பொது முழுதாகப் பணிகள் நிறைவடைந்துள்ளன. இக்கட்டடத் தொகுதி இலங்கை பொறியியற் கூட்டுத்தாபனத்தினால் தயாரிக்கப்பட்ட திட்டத்தின் படி நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன், இரண்டு கட்டங்களில் நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. 800 சதுரமீற்றர் மற்றும் 1100 சதுரமீற்றர் பரப்பளவு கொண்ட 02 கட்டடங்களைக் கொண்ட இந்த பேருந்துத் தரிப்பிடம் பார்க்கும் எல்லாரினதும் மனதை ஈர்க்கும் விதத்தில் சிறந்த திட்டத்தின் படி நிர்மாணிக்கப்பட்டுள்ள இக்கட்டட வளாகத்தின் வெளிப்புற அழகு போன்றே உட்புறமும் மிகவும் கட்டுக்கோப்புடன் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. மாகாணங்களுக்கு இடையிலான மற்றும் மாகாண போக்குவரத்து அலுவலகங்கள், பல்வேறு வகை உணவுகள், பானங்களை வாங்கக்கூடிய 2 சிற்றுண்டிச்சாலைகள், பயணிகளுக்கான தங்கும் வசதிகள், மலசலகூட வசதிகள், அங்கவீனர்களுக்கான வசதிகள் என்பன உள்ளன. இதற்கு மேலதிகமாக மாகாணங்களுக்கு இடையிலான 13 பேருந்துகள் மற்றும் மாகாணத்தினுள் பயணிக்கும் 21 பேருந்துகள் என ஒரே முறையில் 34 பேருந்துகளை நிறுத்தி வைக்கும் இடவசதியும் உண்டு.

இச்செயற்றிட்டத்திற்காக 2016.12.31ஆந் திகதியன்று திரண்ட செலவு 62.2 மி. ரூபாவாகும்.

### 6.1.2 கிண்ணியா பேருந்துத் தரிப்பிடத்தை அமைத்தல்





நிர்மாணப் பணிகள் பூர்த்தியடைந்து வரும் கிண்ணியா புதிய பேருந்துத் தரிப்பிடம்

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் தூரப்பயண சேவைகளுக்கு உரிய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் செயற்றிட்டத்தின் கீழ் 2015ஆம் ஆண்டில் கிழக்கு மாகாணத்தில் கிண்ணியா

நகரசபைக்கு உரிய 225 சதுர மீற்றர் பரப்பளவு கொண்ட நிலத்தில் பேருந்துத் தரிப்பிடத்தினை அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. 2016 வருட இறுதியாகையில், இலங்கை பொறியியற் கூட்டுத்தாபனத்தினால் தயாரிக்கப்பட்ட திட்டத்தின் படி நிர்மாணிக்கப்பட்டுள்ள இப்பேருந்து நிலையத்தின் முதல்கட்ட வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டு உள்ளன.

வெளிப்புற நிலத்தினை செப்பனிடல், பெயர்ப் பலகைகள் மற்றும் பயணிகள் ஆசனங்களைப் பொருத்துதல் உட்பட்ட இரண்டாவது கட்ட பணிகள் 2017ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்படவுள்ளன. திறைசேரி ஏற்பாட்டின் கீழ் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் அமைக்கப்பட்ட இந்த பேருந்துத் தரிப்பிடம் ஒரே முறையில் 4 பேருந்துகளை நிறுத்தி வைப்பதற்கான இடவசதியுடன் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. கடும் வெயிலும் உஷ்ணமும் மிக்க காலநிலையைக் கொண்டுள்ள பிரதேசம் என்பதால் நாளாந்தம் நகருக்கு வரும் போகும் பயணிகளின் மற்றும் அண்மையிலுள்ள பாடசாலைகளில் கல்வி பயிலும் காணவர்களின் போக்குவரத்து வசதிகளைப் பாதுகாப்பான முறையில் பெற்றுக் கொள்ளவதற்கு இப்பேருந்து நிலையம் பாரிய சேவையினை வழங்குகின்றது.

இதற்கு மேலதிகமாக கிண்ணியா பிரதேசத்தை அண்டிய உல்லாசப்பிரயாணிகளை ஈர்க்கும் இடங்களைப் பார்ப்பதற்கு வரும் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளுக்கு பொருந்தும் விதத்தில் அழகான கட்டடமொன்றையும் ஆரோக்கியமான வசதிகளுடனும் அழகான சுற்றுச்சூழலையும் கொண்டதாக உள்ளது.

## 7. உள்ளகத் தகவல்கள் தொழில்நுட்பத் தொகுதி

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் பயணிக்கும் மக்களுக்கு நம்பிக்கையான, பாதுகாப்பான, தரம்மிக்க பொதுப் பயணிகள் சேவையொன்றினை வழங்குவதற்காக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் பிரகாரம் சாட்டப்பட்டுள்ள பணிகள் நிறைவேற்றப்படுகின்றன. இப்பணிகளை நிறைவேற்றுவதற்காக பல்வேறு செயற்றிட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன், அந்த ஒவ்வொரு செயற்றிட்டத்தினதும் தரவுகள் வெவ்வேறாகப் பேணப்படுவது தற்போது மேற்கொள்ளப்படுகின்றது. இவ்வாறு அவ்வச் செயற்றிட்டத்திற்கு உரிய தரவுகளை வெவ்வேறாகக் காணப்படுகின்றமை அலுவலக நடவடிக்கைகளில் சிக்கல் ஏற்படக் காரணமாவதால் நிறுவனத்தின் பணிகளின் விளைப்பயனை விருத்தி செய்வதற்காக மையப்படுத்தப்பட்ட கணினி தரவுகள் தொகுதியொன்றிற்கான (நுவெநசிசளைந சுநளழரசஉந ீடயடெைபெ ளுலளவநஅ யள ய வழவயட ளுழடரவழைெ) ஆரம்ப நடவடிக்கைகள் 2016ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், ஆலோசனைகளுக்கு ஐஊவுயு (ஐகெழசஅயவழைெ ரூ ஊழஅஅரெைஉயவழைெ வுநஉாெழடழபல யுபநெஉல ழக ளுசை டுயமெய) நிறுவனம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக, அலுவலகக் கணினி வலையமைப்பை சிறந்த மட்டத்தில் பேணுதல் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் உட்பட மாகாணங்களுக்கு இடையிலான பயணிகள் போக்குவரத்துச் சேவைகளுக்கு உரிய தகவல்களை அனுமதிபத்திரம் உடையவர்களை மற்றும் ஏனைய தரப்பினரை அறிவுறுத்துவதற்காக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு இணையத்தளத்தில் உள்ளடக்குதல் இதன் இன்னுமொரு பணியாகும். மேலும், தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் வலைத்தளத்தில் காணப்படும் தகவல்களை இற்றைப்படுத்தல் மற்றும் புதிய தகவல்களைத் தேடுதலை எளிதாக்கும் விதத்தில் எளிய முறைமைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன் கீழ் பேருந்துக் கட்டணம் குறித்து தரவுகளைத் தேபோஆ வலைத்தளத்தினூடாக பெற்றுக் கொள்ள முடிதல், மாகாணங்களுக்கு இடையிலான பேருந்து நேர அட்டவணைகளை வலைத்தளத்தினூடாக எளிதாகப் பெற்றுக் கொள்ளும் வகையில் வலைத்தளத்தை மேலும் முன்னேற்றுதல் ஆகியவற்றிற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

செயற்றிட்டத்திற்காக 2016.12.31ஆந் திகதியில் திரண்ட செலவு 1.33 மி.ரூபாவாகும்.

## 8. ஆய்வு

மாகாணங்களுக்கு இடையிலான பயணிகள் போக்குவரத்து தொடர்பில் முக்கியமான தீர்மானங்களை எடுக்கும் போது, கொள்கைகளைத் தயாரிக்கும் போது, திட்டங்களைத் தீட்டும் போது காணப்படும் நிலைமையினை ஆராய்தல் முதலில் நடைபெறும். தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் அவ்வாறான

பணிகளை மேற்கொள்ளும் சந்தர்ப்பங்களில் தேவையான தரவுகளை வழங்குதல் ஆய்வுப் பிரிவினால் மேற்கொள்ளப்படும். அதன் படி பொதுப் போக்குவரத்துச் சேவையினைப் பயன்படுத்துவோர் மற்றும் பேருந்து ஓட்டுனர்கள் ஆகிய இரு தரப்பினர்களுக்கும் நியாயமான முறையில் கேள்வி மற்றும் நிரம்பலை மிகச் சிறப்பாகக் கையாள்வதற்கு தேவையான தரவுகளைத் தொகுத்தல் ஆய்வுப் பிரிவின் முக்கியமான பணியாகும். பிரதானமாக மாகாணங்களுக்கு இடையிலான பேருந்து இயக்கத்திற்குரிய பயணிகள் கேள்வி ஆய்வுகள் மேற்கொள்ளப்படுவதுடன், அதன் மூலம் வழங்கப்படும் சரியான தரவுகள், புதிய பேருந்துச் சேவைகளை அறிமுகப்படுத்தல், முறையானஅட்டவணைகளைத் தயாரித்தல் ஆகியவற்றுடன் பிரச்சினைகளைத் குறைத்துக் கொள்வதற்கும் மிகவும் பயனுள்ளதாக அமையும்.

2016ஆம் ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில், "கெமி செரிய" பேருந்துச் சேவை செயற்றிட்டத்தினை செயற்படுத்துதல் மத்திய மற்றும் கிழக்கு மாகாண வழிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையினால் ஆலோசனை செய்யப்பட்ட வீதிகள் குறித்து ஆண்வு நடாத்தி தரவுகளை ஒன்று சேர்ப்பதற்கும், தெற்கு அதிவேகப் பாதையில் மற்றும் வெளிப்புற சுற்றுப் பாதையில் செய்த ஆய்வு விசேடமாவதுடன், அதிவேகப் பாதையினூடாகப் பயணிக்கும் அதி சொகுசு பேருந்துச் சேவையினை பயணிகளின் கேள்விக்கேற்ப வழங்குவதற்கும் வழிகோலியது. 2016ஆம் ஆண்டினுள் இப்பிரிவினால் 31 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் இதற்காகச் செலவிடப்பட்ட மொத்த தொகை 2.25 மில்லியன் ரூபாவாகும்.

## 9. பொதுப் போக்குவரத்திற்காக ஜீ.பீ.எஸ். (பீளு) தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல்

ஜீ.பீ.எஸ். தொழில்நுட்பத்தினைப் பொதுப் போக்குவரத்துத் துறையில் விளைபயன் மற்றும் நம்பகத்தன்மையினை உறுதி செய்யும் பொருட்டு பயன்படுத்துதல் இச்செயற்பாட்டுத் தொடரின் குறிக்கோளாகும். அதாவது இவ்விசேட உபகரணத் தொகுதியைப் பேருந்தினுள் பொருத்தியதன் பின்னர் அலுவலகத்தில் இருந்தவாறே அப்பேருந்துகளை நெறிப்படுத்தும் ஆற்றல் இதன் மூலம் கிடைத்துள்ளது. இதற்காகவே விசேடமாகத் திட்டமிடப்பட்டு தேசிய போக்குவரத்து ஆணைக்குழு பிரதான அலுவலக வளாகத்தினுள் (பழைய கட்டடத்தை நவீனமயப்படுத்தி) அமைக்கப்பட்ட நவீன ஒழுங்குபடுத்தற் கூடம் 2016.08.08ஆமந் திகதி திறந்து வைக்கப்பட்டது.



புதிய ஜீ.பி.எஸ். ஒழுங்குபடுத்தற் கூடம்

முதன் முதலாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் மாகாணங்களுக்கு இடையிலான பேருந்துகளை ஒழுங்குபடுத்துவதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட இவ்வுபகரணத் தொகுதி தற்போது 2085 மாகாணங்களுக்கு இடையிலான தனியார் பேருந்துகளில் பொருத்தப்பட்டுள்ளது.

பொதுப் போக்குவரத்துச் சேவையில் ஏற்பட்டுள்ள சவால்மிகு பிரச்சினைகளைத் தீர்ப்பதை அடிப்படையாகக் கொண்டு தரமிக்கதும் பாதுகாப்பு மிக்கதுமான பொதுப் போக்குவரத்துச் சேவை ஒன்றினை தாபிப்பததன் பொருட்டு தகவல்கள் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப விதிகளைப் பயன்படுத்தி மாகாணங்களுக்கு இடையிலான பேருந்துகளை ஒழுங்குபடுத்ததல் முதன்முதலாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வுபகரணத் தொகுதி பயணிக்கும் பேருந்துகளில் வேகத்தினைக் கட்டுப்படுத்தி எச்சரிக்கை சமிக்ஞை ஒன்று பேருந்தினுள் ஒலிப்பதுடன் அதற்கு இணைவாக காட்டுப்பாட்டு அறையில் அது தொடர்பில் குறிக்கப்படுவதாலும் இது வரையில் ஜீ.பி.எஸ். தொழில்நுட்பம் பொருத்தப்பட்டுள்ள பல பேருந்துகள் கூடிய வேகத்துடன் செல்வதைக் கட்டுப்படுத்தியுள்ளன. இதற்கு மேலதிகமாக பொது மக்கள் முறைப்பாடுகள் அலகுடன் இணைக்கப்பட்டுள்ள துரித தொலைபேசி அழைப்புப் பிரிவிற்கு கிடைக்கும் முறைப்பாடுகளை உடனடியாகத் தீர்ப்பதற்கும் அதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் முடியுமாயுள்ளது.

2016 ஆம் ஆண்டினுள் இதற்காக 3.68 மி. ரூபா திரண்ட செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 10. பேருந்துகளைப் பௌதிக ரீதியில் பரிசீலித்தல் மற்றும் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரம் வழங்குதல்

இலங்கையில் பொதுப் பயணிகள் போக்குவரத்துச் சேவையின் முன்னோடியாக இருப்பது பேருந்துகளின் மூலமான மேற்கொள்ளப்படும் போக்குவரத்துச் சேவையாகும். அப்பேருந்துப் பயணிகள் போக்குவரத்துச் சேவைக்குரிய பணிகளை ஒழுங்குபடுத்துதல் தவிர மாகாணங்களுக்கு இடையிலான தனியார் பேருந்துச் சேவைகசை சிறந்த மட்டத்தில் மேற்கொள்வதற்கு வேண்டிய ஒழுங்குவிதிகளை தயாரிப்பதும் பயணிகள் போக்குரவத்து அனுமதிப்பத்திரங்களை வழங்குதலும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

மாகாணங்களுக்கு இடையிலான பேருந்துச் சேவை 4 சேவை வகைகளைக் கொண்டுள்ளதுடன், 2016.12.31ஆந் திகதியாகையில் அவ்வச் சேவை வகைக்கு தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டுள்ள செல்லுபடியாகும் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

| சேவை வகை | பேருந்துகளின் எண்ணிக்கை (பயணிகள் சேவை அனுமதிப்பத்திர எண்ணிக்கை) |
|---|---|
| சாதாரண | 2072 |
| அரை சொகுசு | 458 |
| சொகுசு | 563 |
| அதி சொகுசு | 95 |
| மொத்தம் | 3188 |




மூலம்- இயக்குதல் மற்றும் சேவைகள் கண்காணிப்புத் திணைக்களம், தேபோஆ

மாகாணங்களுக்கு இடையிலான பேருந்து சேவைகள் என்பது ஒரே பயண முறையில் பல மணித்தியாலங் கொண்ட நீண்ட நேரத்திற்கு பயணத்தில் ஈடுபடும் பேருந்துச் சேவை ஆகும். அதனால் அதற்காக ஈடபடுத்தப்படும் பேருந்துகள் மிகவும் நல்ல நிலையில் இருத்தல் வேண்டும். எனவே தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அப்பேருந்துகளின் தகுதி குறித்து கூடிய கவனஞ் செலுத்துகின்றது. இதற்கு மேலதிகமாக,பயணிகளின் பாதுகாப்பையும் சௌகரியத்தையும் உறுதிப்படுத்தும் நோக்கில், அனுமதிப்பத்திரமொன்றினை வழங்குவதற்கு முதல் பேருந்துகளில் அவ்வவ் சேவை வகைக்கு ஏற்ற் விதத்தில் இருக்க வேண்டிய விடயங்கள் குறித்து முழுமையான பரிசீலினை செய்யப்படும். அதன் படி, பேருந்துகளின் உள்ளே மற்றும் வெளியே ஒலி மட்டம் (ழுளைந டநஎநட), மிதிபலகை, கதவுகள், அவசரக் கதவுகள் என்பன உரிய முறையில் செயற்படுகின்றனவா எனவும், ஆசனங்களின் நீளம், அகலம், உயரம் மற்றும் ஆசனங்களுக்கு இடையிலான இடைவெளி என்பன நிபந்தனைகளுக்கு இணங்க இருக்கின்றனவா எனவும், மணித் தொகுதி, பிரதான விளக்கு, சமிக்ஞை விளக்குகள்என்பன உரிய முறையில் செயற்படுகின்றனவா எனவும் பேருந்தில் எல்லா பௌதிக நிலைமைகளையும் பரிசீலித்து அறிக்கை வழங்கப்படும். பயணிகள் போக்குவரத்திற்காக ஈடுபடுத்த முன்வைக்கப்படும் எல்லா பேருந்துகளுக்கும் இவ்வறிக்கையினைப் பெற்று முன்வைப்பது கட்டாயமாகும்.

அதன் படி, புதிய மாகாணங்களுக்கு இடையிலான பயணிகள் சேவை அனுமதிப் பத்திரம் வழங்கும் போது மற்றும் பயணிப்பதிலிருந்து அகற்றப்பட்ட பேருந்துகளுக்குப் பதிலாக புதிய பேருந்துகளைப் பதிலீடு செய்யும் போது, இவ்வறிக்கையில் அடங்கியுள்ள விடயங்களைக் கருத்திற் கொண்டு, உரிய வழங்கல் குறித்து இறுதித் தீர்மானம் எடுக்கப்படும்.

மாகாணங்களுக்கு இடையிலான பாதைகளில் பொதுப் பயணிகள் போக்குவரத்துச் சேவைக்காக ஈடுபடுத்தப்படும் பேருந்துகளுக்கு பயணிகள் சேவை அனுமதிப்பத்திரம் வழங்குதல், கேள்விப் பத்திர நடைமுறைப்படி இது மேற்கொள்ளப்படுவதுடன், அம்முறைமையினை பின்பற்றுவதன மூலம் கூடிய நம்பிக்கையுடனும் வெளிப்படைத் தன்மையுடனும் உரிய பணிகள் நிறைவேற்றப்படுகின்றன.

அதன் படி, தெற்கு அதிவேகப் பாதை ஊடாக தற்காலிக அனுமதிப் பத்திரத்தில் பேருந்துகள் ஓடும் பாதைகள் மற்றும் ஆய்வின் மூலம் இனங்காணப்பட்ட புதிய பாதைகளுக்காக கேள்விப்பத்திரம் மூலம் புதிய பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கான உரிய பத்திரிகை அறிவித்தல் 2016.08.08ஆந் திகதி வெளியிடப்பட்டது.

மேற்படி கேள்விப்பத்திரத்தை 2016.09.13ஆந் திகதி திறக்க திட்டமிடப்பட்டு இருந்தாலும், சிர தரப்பினரால் உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த மனுக்களின் காரணமாக குறிப்பிட்ட தினத்தில் கேள்விப் பத்திரம் திறக்கப்படவில்லை. அம்மனுக்கள் தொடர்பில் பரிசீலனைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால் 2016ஆம் ஆண்டினுள் கேள்விப் பத்திரம் மூலம் புதிய பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களை வழங்க முடியாமல் போயுள்ளது.

## 11. பொதுமக்கள் முறைபாடுகள்

மாகாணங்களுக்கு இடையிலான தூரப்பயண சேவைகள் தனியார் பேருந்துச் சேவையினைப் பயன்படுத்தும் போது ஏதேனும் முறையில் மக்கள் முகங்கொடுக்க வேண்டிய அசௌகரியங்கள் மற்றும் உரிமைகள் மீறப்படல் போன்ற விடயங்கள் தொடர்பாக முன்வைக்கப்படும் முறைப்பாடுகளை விசாரித்தல் பொதுமக்கள் முறைப்பாட்டு விசாரணை அலகின் பொறுப்பாகும். பயணிக்கும் மக்களின் நலன் கருதி அச்சந்தர்ப்பத்தில் பணியில் இருந்த பேருந்து ஊழியரையும் அழைப்பித்து நியாயமானதொரு விசாரணையொன்றினை மேற்கொண்டு தீர்வுகள் பெற்றுக் கொடுக்கப்படும். நாள் முழுதும் 24 மணி நேரமும் செயற்படும் (1955) உடனடித் தொலைபேசி அழைப்பு(ர்ழவ டலைநெ)இ (0112595555) மூலமாகவும் தொலைநகல், மின் அஞ்சல் மற்றும் கடிதம் மூலமாகவும், ஆணைக்குழுவிற்கு வருகைத் தந்தும் முறைபாடுகளை முன்வைக்கலாம். அவ்வாறு முன்வைக்கப்படும் பொது மக்கள் முறைப்பாடுகளுள், 2016ஆம் ஆண்டில் திசெம்பர் 31ஆந் திகதியாகையில் கிடைக்கப் பெற்றுள்ள முறைப்பாடுகள் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

| இல. | முறைபாடுகள் மூலம் வெளிப்பட்ட குற்றங்களின் தன்மை | எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | அதிகரித்த கட்டண அறவீடு.்.மீதிப் பணத்தைக் கொடுக்காமை | 1198 |
| 02 | பிரயாணிகளுடன் முரட்டுத்தனமாக நடந்து கொள்ளுதல் | 1403 |
| 03 | இடைப்பட்ட இடங்களில் தேவையின்றி பேருந்தினை நிறுத்தி பயணிகளை ஏற்றுதல் | 357 |
| 04 | அளவுக்கு அதிகமான பிரயாணிகளை ஏற்றுதல் | 393 |
| 05 | முறையாகப் பயணச்சீட்டுக்களை வழங்காமை | 551 |
| 06 | கவனயீனமாக வண்டியை ஓட்டுதல் | 568 |
| 07 | குறிக்கப்பட்ட நேர அட்டவணையை மீறுதல் | 592 |
| 08 | குறிப்பிட்ட இடத்திலிருந்து ஆரம்பிக்காமை மற்றும் முடிவிடம் வரை போகாமை | 351 |
| 09 | பேருந்து பயணிகள் போக்குவரத்திற்கு பொருத்தமான நிலையில் இல்லாமை | 141 |
| 10 | குளிரூட்டிகள் ஒழுங்கான முறையில் இயங்காமை | 159 |
| 11 | பயணிகள் போக்குவரத்து பேருந்துகளுக்கிடையில் ஏற்படும் மோதல்கள் | 68 |
| 12 | கூடிய சத்தத்தில் ஒலிப்பதிவு நாடா.்.வானொலியை இயக்குதல் | 99 |
| 13 | பயணப்பாதை அனுமதிப்பத்திரமின்றி ஓட்டுதல் | 79 |
| | மொத்தம் | 5959 |

மூலம்- தரக்கட்டுப்பாடு மற்றும் வெளி உறவுகள் திணைக்களம்- தேபோஆ

தேசிய போக்குவரத்து ஆணைக்குழவிற்கு கிடைக்கப் பெறும் மக்கள் முறைபாடுகளுள், மாகாணங்களுக்கு இடையிலான பேருந்துச் சேவைகளுக்குரிய முறைபாடுகள் தொடர்பில் மாத்திரம் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அலுவலகத்தில் விசாரணை நடவடிக்கைகள் மேற்கொண்டு தெவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதுடன், மாகாண சேவைகளுக்குரிய முறைபாடுகளை உரிய மாகாண அலுவலகங்களுக்கு அனுப்பப்படுவதுடன், இலங்கைப் போக்குவரத்துச் சபை சேவைகளுக்குரிய முறைபாடுகள் இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவருக்கும் அனுப்பி வைக்கப்படும்.

மீளாய்வு ஆண்டின் இறுதியளவில் பொதுமக்கள் முறைபாட்டு பிரிவிற்கு கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கை 5959 ஆவதுடன் 2016 திசெம்பர் 31ஆந் திகதியாகையில் அம்முறைப்பாடுகளில் 4334 அதாவது 73மூ ஆன முறைப்பாடுகள் தீர்த்து வைக்கப்பட்டுள்ளன.

## 12. நடமாடும் சோதனையிடல்கள் மற்றும் விசாரணை



1971 இல 37ஐக் கொண்ட தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின பிரகாரம் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படி மாகாணங்களுக்கு இடையிலான பயணிகள் போக்குவரத்து தனியார் பேருந்துகளிற்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்படுகின்றது. அவ்வாறே அவ்வனுமதிப்பத்திரத்தின் கீழ் பயணிக்கும் பேருந்து தொடர்பில் மற்றும் அவற்றில் பணி புரியும் ஊழியர்களால் பின்பற்ற வேண்டிய நிபந்தனைகள் தொடரொறொன்று ஆணைக்குழுவினால் பிறப்பிக்கப்பட்டுள்ளதுடன், அந்நிபந்தனைகளைப் பின்பற்றுதல் குறித்து சோதனையிடல் நடமாடும் சோதனைப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படும். அச்சோதனைகளின் போது அனுமதிப்பத்திர நிபந்தனைகளை மீறி மாகாணங்களுக்கு இடையிலான பாதைகளில் பேருந்துகள் ஓடுவதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் குறிப்பிட்ட பேருந்துகள் தொடர்பில் விசாரணை செய்து தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். பயணிகள் சேவை அனுமதிப்பத்திரமின்றி மாகாணங்களுக்கு இடையிலான பாதைகளில் ஓடும் பேருந்துகள் தொடர்பில் சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கு உதவிசெய்தலும் தரம்மிக்க பயணிகள் சேவையினை வழங்குவதற்கான பங்களிப்பை வழங்குவதும் நடமாடும் சோதனையிடல் அலகினால் நிறைவேற்றப்படுகின்றது.

மேலும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் அரசாங்கத்தின் உதவித்தொகை கொண்டு செயற்படும் “சிசு செரிய” பாடசாலைப் பேருந்துச் சேவை மற்றும் “நிசி செரிய” இரவு நேரப் பேருந்துச் சேவை என்பனவற்றையும் கண்காணிக்கும் நடவடிக்கைகளும் இப்பிரிவினால் நிறைவேற்றப்படுகின்றன.

2016ஆம் ஆண்டினுள் 12613 பேருந்துகள் நடமாடும் சோதனைப் பிரிவினால் சோதனைக்கு உட்படுத்தப்பட்டதுடன், “சிசு செரிய” மற்றும் “நிசி செரிய” செயற்றிட்டங்களுக்குரிய 583 பேருந்துகளும் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அவ்வாறு மேற்கொள்ளப்பட்ட சோதனைகளின் மூலம் தவறான நடத்தைகள் நடைபெற்றுள்ளன என்பதாக 5596 அறிக்கையிடப்பட்ட சந்தர்ப்பங்கள் உள்ளதுடன், அவற்றில் 5529இற்கான விசாரணை நடவடிக்கைகள் முடிவுற்றுள்ளதுடன் பயணிகள் அனுமதிப்பத்திரங்களை இற்றைப்படுத்தும் சந்தர்ப்பத்தில் எல்லா விசாரணைகளும் முடிவுற்றுள்ளதாக உறுதிப்படுத்தப்படல் வேண்டும். “சிசு செரிய” செயற்றிட்டம் தொடர்பில் எல்லா விசாரணை நடவடிக்கைகளும் பூர்த்தி அடைந்துள்ளன.

## 13. தேசிய போக்குவரத்து புள்ளிவிபர அறிக்கை

“போக்குவரத்து” என்ற தலைப்பின் கீழ் தரை மார்க்கம், நீர் மார்க்கம், ஆகாய மார்க்கம் ஆகிய மூன்று ஊடகங்களினூடாக மேற்கொள்ளப்படும் போக்குவரத்து நடவடிக்கைகள் உள்ளடங்கிய போதும் அவ்வெல்லாப் பிரிவுகளும் தொடர்பில் தகவல்கள் ஒரே இடத்திலிருந்து பெற்றுக் கொள்ளும் முறைமையொன்று செயற்படாமையால் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு 2010ஆம் ஆண்டில் இச்செயற்றிட்டத்தினை ஆரம்பித்தது. போக்குவரத்துத் துறையில் உள்ள எல்லா நிறுவனங்களிலும் இருந்து தகவல்கள் மற்றும் தரவுகளை ஒன்று சேர்த்து பல்வேறு கோணங்களிலும் பகுப்பாய்வு செய்து மிகவும் கவர்ச்சிகரமாகத் தயாரிக்கப்படும் இந்த “தேசிய போக்குவரத்து புள்ளிவிபரவியல் அறிக்கை” தொடர்ந்தும் ஒவ்வொரு வருடமும் அச்சிடப்பட்ட நூலாக மும்மொழிகளிலும் வெளியிடப்படுகின்றது.

போக்குவரத்து குறித்து ஆய்வு செய்யும், திட்டங்களைத் தயாரிக்கும் நிறுவனங்கள் மற்றும் அதிகாரிகளுக்கும் போக்குவரத்து தொடர்பில் கற்கை நெறிகளை மேற்கொள்வோருக்கும் இவ்வறிக்கையினை உசாவுதல் அந்நடவடிக்கைகளுக்கு பெரும் உறுதுணையாக அமையும்.

இவ்வறிக்கையைத் தயாரிப்பதற்கு, போக்குவரத்து அமைச்சு, மற்றும் போக்குவரத்துடன் தொடர்புபட்ட பல்வேறு நிறுவனங்களிடமிருந்து தரவுகளைச் சேகரித்து, அத்தரவுகளைப் பகுப்பாய்வு செய்து வருடாந்த அறிக்கையாக வெளியிடப்படும். 2016.01.01 முதல் 2016.12.31 வரையிலான வருடத்தின் தகவல்களை உள்ளடக்கி 2016 தேசிய போக்குவரத்து புள்ளிவிபர அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

இவ்வறிக்கையினைத் தயாரிப்பதற்கு பின்வரும் நிறுவனங்களிடமிருந்து புள்ளிவிபரங்கள் பெறப்பட்டுள்ளன.

1. தேசிய போக்குவரத்துச் ஆணைக்குழு
2. இலங்கைப் போக்குவரத்துச் சபை
3. வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபைகள்
4. இலங்கை புகையிரதத் திணைக்களம்
5. மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம்
6. தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகம்
7. இலங்கை மத்திய வங்கி
8. சனத்தொகைக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்
9. மோட்டார் வாகன பொலிஸ் தலைமையகம்
10. இலங்கை துறைமுக அதிகாரசபை
11. வீதி அபிவிருத்தி அதிகாரசபை
12. சிவில் விமான சேவை அதிகாரசபை
13. சிவில் விமான சேவை அமைச்சு
14. நெடுஞ்சாலைகள் அமைச்சு

மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2013 ஆம் வருடத்தில் நிதிப் பற்றாக்குறை கானப்பட்டாலும் 2012,2014,2015,2016 ஆம் வருடங்களில் மிகை கானப்பட்டது. எவ்வாரெனினும், நிதி விளைவிற்கு ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு மீண்டும சீராக்கும்போது 2012 ஆம் ஆண்டில் ரூபா 109,057,130 ஆன சபையின் நேர்ப் பங்களிப்பு 2013 ஆம் ஆணடில் ரூபா 80,262,665 மறைப் பெறுமதியாக ஆகியிருந்தது. மீண்டும் 2014 ஆம் வருடத்தில் ரூபா 248,102,525 நேர்ப் பங்களிப்பைப் பெற்றிருந்ததுடன் அது 2016 ஆம் வருடத்தில் ரூபா 341,328,228 வரை தொடர்ச்சியாக வளர்ச்சியடைந்திருந்தது.

3.2 ஆணைக்குழுவிற்கு எதிராக அல்லது ஆணைக்குழுவினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட விடயங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன

(அ) சபைக்கு எதிராக வெளித்தரப்பினரால் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களை இரத்துச் செய்தல் மற்றும் ஆசனங்களை ஒதுக்குதல் தொடர்பாக 09 வழக்குகளும், அதன் சேவை அனுமதிப்பத்திரங்கள் வழங்குதல் தொடர்பாக வெளியிடப்பட்ட பெறுகை அறிவித்தல்களின் நிபந்தனைகளுக்கு எதிராக 05 வழக்குகளும் தாக்கல் செய்யப்பட்டிருந்ததுடன் ஊழியர்களால் நிறுவனத்திற்கெதிராக 04 வழக்குகளும் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

(ஆ) சபையினால் மீளாய்வு வருடத்தில் செல்லுபடியான பயணிகள் சேவை அனுமதிப்பத்திரமின்றி பஸ் வண்டிகள் ஓடவிடப்பட்டது தொடர்பாக 04 வெளித்தரப்பினருக்கு எதிராக 04 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பிரயாணிகள் போக்குவரத்து சேவைகளுக்குரிய தேசிய கொள்கை தொடர்பாக இலங்கை அரசிற்கு ஆலோசனை வழங்குதல் மற்றும் பொது மக்கள் போக்குவரத்துத் தேவைகளை மற்றும் பொது மக்கள் போக்குவரத்துத் தேவைகளை நிறைவு செய்வதற்காக செயற்திறனான பேருந்து போக்குவரத்து முறைமையொன்று அமுல்படுத்தப்படுகின்றமையை உறுதிப்படுத்துவதற்காக தேவையான ஒழுங்கமைக்கப்பட்ட சட்டகமொன்றைத் தயாரித்தல் ஆணைக்குழுவின் செயற்பணியாக இருந்ததுடன் அதனை நிறைவேற்றுவது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆணைக்குழுவினால் 2009 ஆம் ஆண்டின் போது வெளியிடப்பட்ட போக்குவரத்துக் கொள்கையில் உள்ளடங்கிய பிரயாணிகளின் போக்குவரத்திற்குரிய சில விடயங்கள் நிகழ்காலத்திற்கு ஒத்துப்போகும் வகையில் தேவையான திருத்தங்களை மேற்கொள்வதற்காக அரசிற்கு ஆலோசனை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு தேவையான ஆலோசனைகளை அரசாங்கத்திற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திட்டமிடப்பட்ட பின்வரும் இலக்குகளை பூர்த்தி செய்ய முடியாதிருந்தது.

(i) மீளாய்வு வருடத்தினுல் பயணிகளின் கேள்வி மற்றும் சேவைகளை வழங்குதல் தொடர்பாக 50 ஆய்வுகளை மேற்கொள்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்தும் வருட இறுதியாகும் போது 31 ஆய்வுகள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ii) மீளாய்வாண்டினுல் மாகாணங்களுக்கிடையில் 514 வீதிகளில் ஒன்றினைந்த பஸ் வண்டி ஓட்ட நேர அட்டவணையைத் தயாரித்து அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தும், 234 வீதிகளுக்கு மாத்திரமே நேர அட்டவனை தயாரிக்கப்பட்டிருந்தது. அவ்வாரே நேர அட்டவனை தயாரிக்கப்பட்டிருந்த வீதிகளில் குறித்த நேர

அட்டவனையின் கீழ் பஸ் சேவைகளை ஈடுபடுத்தல் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) பேரூந்து பிரயாணிகளுக்கு துார பிரயாண சேவை பேரூந்து நிலையங்களை இலகுவாக இனங்காணக்கூடிய வகையில் 250 வரையறுக்கப்பட்ட தரிப்பிட சமிக்ஞை பதாதைகள் நாடு முழுவதும் ஸ்தாபிப்பதற்கு திட்டமிடப்பட்டு அதற்காக ரூபா 0.5 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்தும் வருடத்தினுல் புதிய சமிக்ஞை பதாகைகள் எதுவும் தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) செயற்பாட்டுத் திட்டத்திற்கு அமைவாக 2016 ஆம் வருடத்தில் யாழ்ப்பான பேரூந்து நிலைய (Terminal) நிர்மான நடவடிக்கைகளுக்காக ரூபா 100 மில்லியன் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டு நிர்மான நடவடிக்கைகளில் 60% இனை நிறைவு செய்ய திட்டமிடப்பட்டிருந்தும் அந்நிர்மான நடவடிக்கைகளில் 3% மாத்திரம் நிறைவு செய்யப்பட்டிருந்தது. மேலும் மீளாய்வாண்டில் கிளிநொச்சி பேரூந்து நிலைய நிர்மான நடவடிக்கைகளுக்காக ரூபா 25 மில்லியன்கள் ஒதுக்கப்பட்டு 80% இனை நிறைவு செய்ய திட்டமிடப்பட்டிருந்தும் அதற்கான பெறுகை நடவடிக்கைகள் மாத்திரம் மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(v) சபை அலுவலகத்திலிருந்து பேரூந்துகள் மற்றும் பயணிகளின் தகவல்ளை அவதானிப்பதற்காக GPS கணணி மென்பொருள் வசதிகளுடனான முறைமையொன்றை தாபிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததோடு மீளாய்வு ஆண்டினுல் இதற்காக ரூபா 17,570,635 பெறுமதியான கணணிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இம்முறைமையின் கீழ் 3216 பேரூந்துகளுக்கான உபகரணங்கள் பொருத்தப்பட்டு தகவல்களை அறிந்துகொள்ள திட்டமிடப்பட்டிருந்தும் 375 பேரூந்துகளில் மாத்திரம் சம்பந்தப்பட்ட உபகரணங்கள் பொருத்தப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் எதிர்பார்க்கப்பட்ட இலக்கில் 88% இனை அடைந்துகொள்ள முடியாதிருந்தது.

(இ) 13 வீதிகளில் பயணிகள் பேருந்துகளிற்காக அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு சபையினால் 2015 ஜுன் 09 ஆம் திகதி விலைமனுக்கள் கோரப்பட்டிருந்ததோடு குறித்த அனைத்து வீதிகளுக்கும் 93 விண்ணப்பதாரிகள் விண்ணப்பித்திருந்தார்கள். ஆயினும் 05 வீதிகளுக்கு மாத்திரம் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டதுடன் கணக்கய்வுத் தினமான 2017 மே மாதம் 19 ஆம் திகதி வரையிலும் எஞ்சிய அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தனியார் பேரூந்து கைத்தொழிலை மேம்படுத்துதல், பேரூந்து சேவை தரத்தினை மேம்படுத்துதல் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் போன்ற விடயங்களிற்காக சபையினால் மீளாய்வு ஆண்டில் திறைசேரியிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 75,000,000 ஒதுக்கீட்டில் ஹிங்குரக்கொடை பேரூந்து நிலையத்தை நிர்மாணிப்பதற்கு மற்றும் பெஸ்தியன் மாவத்தை பேரூந்து நிலையத்தை நவீனமயப்படுத்த திட்டமிடப்பட்டிருந்தும் குறித்த நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் ரூபா 43,000,000 இனை திறைசேரி உண்டியல்கள் மற்றும் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்து ரூபா 26,106,954 தொகை வருட இறுதியில் திறைசேரிக்கு மீளச் செழுத்தப்பட்டிருந்தது.

(ஆ) தேசீய போக்குவரத்து ஆணைக்குழு சட்டத்தில் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் தொடர்பாக கட்டனங்களை அறவிடும் விதம் காட்டப்படாதிருந்ததுடன் பணிப்பாளர் சபையின் தீர்மானமொன்றின் பிரகாரம் ரூபா 3000 வருடாந்தக் கட்டன அடிப்படையில் குறித்த அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன. இவ்வனுமதிப் பத்திரங்களை உறவு முறையின் கீழ் மாத்திரம் வேரொருவருக்கு கையளிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்ததுடன், அவ்வாரான அனுமதிப்பத்திரங்கள் ரூபா 15000 வருடாந்தக் கட்டனத்தின் அடிப்படையில் வழங்கப்பட்டிருந்ததுடன் 2010 ஆம் ஆண்டு முதல் புதிதாக வழங்கப்படுகின்ற அனுமதிப்பத்திரங்கள் விலைமனுக்கோரல் முறைமையின் கீழ் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒரே வீதிக்காக 03 விதமான கட்டன வகைகளின் கீழ் அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் மேற்கொள்ளப்பட்டமையினால் வீதி அனுமதிப்பத்திரங்களுக்கு கட்டனங்கள் அறவிடுவதில் கடுமையான சீர்குலைவு கானப்பட்டதுடன் அது தொடர்பாக முகாமைத்துவம் கவனம் செழுத்தியிருக்கவில்லை. எவ்வாரிருந்தும் 2017 மே மாதம் 28 ஆம்

திகதியாகும்போது வழங்கப்பட்டிருந்த 3277 மொத்த அனுமதிப்பத்திரங்களில் 70% ஆனவை ரூபா 3000 பெறுமதியான வருடாந்த அனுமதிப்பத்திரக் கட்டனங்களின் கீழ் வழங்கப்பட்டிருந்ததுடன் மொத்த அனுமதிப்பத்திரங்களில் 22% ஆனவை ரூபா 15,000 வருடாந்த புதுப்பித்தல் கட்டனத்தினடிப்படையில் வழங்கப்பட்டிருந்தன.

(இ) தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 25 (ஆ) பிரிவின் பிரகாரம் ஒரு வருடத்திற்குக் குறையாததும் மூன்று வருடங்களுக்கு மேற்படாததுமான கால எல்லைக்கு செல்லுபடியாகும் விதத்தில் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்கள் வழங்கவேண்டியிருந்தும், 2015 ஜுலை 25 ஆம் திகதி முதல் 2016 டிசம்பர் 28 ஆம் திகதி வரையிலான கால எல்லையினுல் அதிவேகப் வீதியில் மாத்திரம் 65 சொகுசு பேரூந்துகளுக்கும் 02 சாதாரண பேரூந்துகளுக்கும் ஒரு நாளைக்கு ரூபா 2500 அறவிட்டு தற்காலிக பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன. இதன் பிரகாரம் ஆகக் குறைந்த விலைகோரல் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு விலைமனுக்கள் மூலம் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படாமையினால் தேசீய போக்குவரத்து ஆணைக்குழுவிற்கு அனுமதிப்த்திரம் மூலம் கிடைக்கவேண்டிய பாரிய வருமானத்தை இழக்க நேரிட்டது.

(ஈ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி பேரூந்துகளை சேவையில் ஈடுபடுத்த வேண்டுமென ஆணைக்குழுவினால் அடையாளப்படுத்தப்பட்டிருந்த 30 வீதிகளுக்கு வழங்கப்படவேண்டிய வீதி அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை 141 ஆகும். 2016 ஆம் ஆண்டு முதல் கணக்காய்வுத் திகதியான 2017 மே மாதம் 28 ஆம் திகதி வரையிலான கால எல்லையினுல் இவ் அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு சபை தவறியதன் காரணமாக மாகாணங்களுக்கிடையிலான மற்றும் தேசீய பெருந்தெருக்கல் சேவைகளில் நிலவுகின்ற பயணிகளின் கேள்விக்குப் போதுமான விணைதிறன் மிக்க மற்றும் போதுமான பயணிகள் போக்குவரத்து சேவையொன்றை வழங்குவதற்கு இயலாது போயிருந்ததுடன் அதனூடாக ஆணைக்குழுவிற்கு கிடைக்க வேண்டியிருந்த வீதி அனுமதிப் பத்திர வருமானத்தை இழக்க வேண்டியேற்பட்டது.

(உ) மாகாணங்களுக்கிடையிலான பேருந்து மற்றும் மாகாணத்தினுல் ஓடுகின்ற பேருந்துகளின் ஓட்ட நேர அட்டவனைகளைக் காட்சிப்படுத்தும் நோக்கில் ஆணைக்குழுவினால் 2013 ஆம் வருடத்தில் ரூபா 62,415,360 தொகையினை செலவு செய்து கொழும்பு பெஸ்ட்டியன் மாவத்தை, அநுராதபுரம்,

குருணாகல், நுவரெலியா, கதிர்காமம், இரத்தினபுரி மற்றும் புத்தளம் போன்ற பிரதான இடங்களில் 07 இலத்திரனியல் பலகைகள் பொருத்தப்பட்டிருந்தன. ஆயினும் அவ்வனைத்துப் பலகைகளும் மூன்று வருட காலமாக செயலிழந்து கானப்பட்டதுடன் அது தொடர்பாக முகாமைத்துவம் கவனம் செழுத்தியிருக்கவில்லை.

(ஊ) பெஸ்ட்டியன் மாவத்தை பஸ் நிலைய நடவடிக்கைகளை அதன் முகாமையாளர் மற்றும் ஆணைக்குழுவின் தலைவருக்கு தமது அலுவலகத்திலிருந்தே மேற்பார்வை செய்யக்கூடியவாறு ரூபா 470,250 செலவிடப்பட்டு 2014 ஜூன் மாதத்தில் பொருத்தப்பட்டிருந்த 16 CCTV கமராக்களில் 14 கமராக்கள் பகுப்பாய்வு ஆண்டு இறுதியாகும் போதே செயலிழந்து கானப்பட்டது. குறித்த கமரா முறைமையினை கணக்காய்வுத் தினமான 2017 ஜூன் மாதம் 06 ஆம் திகதியாகும்போதும் செயற்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(எ) மாகாணங்களுக்கிடையிலான பயணிகள் போக்குவரத்தில் ஈடுபடுகின்ற பயணிகளின் துப்பாரவாக்கல் நடவடிக்கைகளுக்காக ஆணைக்குழுவினால் கொழும்பு பெஸ்ட்டியன் மாவத்தையில் கழிவறைத் தொகுதியொன்று நிறுவப்பட்டிருந்ததுடன் அங்கு கட்டனங்களை அறவிடுதல், சுத்தம் செய்து பேனுதல் போன்ற நடவடிக்கைகளுக்காக நிறுவனமொன்று தெரிவு செய்யப்பட்டு சபை குறித்த நிறுவனத்துடன் ஒப்பந்தமொன்றைக் கைச்சாத்திட்டிருந்தது. அவ் ஒப்பந்தத்தின் பிரகாரம் கழிவறை வசதிகளை வழங்குவதற்காக ஒரு பயணியிடமிருந்து ஒரு சந்தர்ப்பத்திற்கு ரூபா 7.00 கட்டனமொன்றை அறவிடவேண்டியிருந்தும், அதற்கு மாற்றமாக ஒரு பயணியிடமிருந்து ரூபா 20.00 தொகையினை சபையின் அங்கீகாரமின்றி அறவிட்டிருந்தாலும் அது தொடர்பாக முகாமைத்துவம் கவனம் செழுத்தியிருக்கவில்லை.

(ஏ) வடமாகாணத்தின் பிரதான பேரூந்து மாற்ல் நிலையமாக 2015 ஆம் வருடத்தில் 166,393,051 செலவில் வவுனியா நகரத்தில் பஸ் நிலையமொன்று தாபிக்கப்ட்டிருந்தது. அதன் நிர்மான நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டு ஒப்பந்ததாரரினால் 2017 ஜனவரி 15 ஆம் திகதி சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தாலும் அத்திகதியிலிருந்து 2017 செப்டெம்பர் 28 ஆம் திகதியாகும் போதும் குறித்த பஸ் நீலையம் உபயோகிக்கப்படாமல் பயணற்றுக் கானப்படுகின்றது. ஆயினும் குறித்த காலத்தினுல் அதன் பதவியினருக்கான சம்பளம், துப்பரவாக்கல் செலவின்ங்கள், மின்சாரம், தொலைபேசி, மற்றும் நீர் வழங்கள் நடவடிக்கைகளுக்காக ரூபா 2,807,541

செலவு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் பேருந்து நிலையத்தை உபயோகிப்பதற்காக பொறுப்பான தரப்பினர்கள் நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கவில்லை.

## 4.3 அடையாளப்படுத்தப்பட்ட நட்டங்கள்

2016 ஆகஸ்ட் மாதம் 08 ஆம் திகதி விலைமனு இலக்கம் 23 இன் பிரகாரம் பயணிகள் அனுமதிப்பத்திரங்கள் தொடர்பாக விலைமனு அறிவித்தல்களை செய்தித்தாள்கள் ஊடாக வெளியிட்ட போது குறித்த அறிவித்தல்களை சரியாக தயாரிக்காமையினால் 04 சந்தர்ப்பங்களிலும் அறிவித்தல்களை சரிசெய்து செய்தித் தாள்களில் வெளியிட வேண்டி ஏற்பட்டதனால் ரூபா 417,746 தொகையை சபைக்கு வீனாக செலவிடவேண்டியிருந்தது.

## 4.4 தாமதமாகிய கருத்திட்டங்கள்

மீளாய்வு வருடத்தின் செயற்பாட்டுத் திட்டத்திற்கேற்ப 2016 மார்ச் 31, 2016 செப்டெம்பர் 30 மற்றும் 2016 டிசம்பர் 31 எனும் திகதிகளில் முடிவுருத்தப்பட வேண்டிய மதிப்பீடு செய்யப்பட்ட செலவினம் ரூபா 76,524,812 பெறுமதியான 04 கருத்திட்டங்கள் 2017 மே மாதம் 18 ஆம் திகதியாகும் போதும் முடிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.5 பதவியணியினர் நிர்வாகம்

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரையும் உள்ளபடியான பதவியணியினரையும் ஒப்பீடு செய்த போது 35 பதவி வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் 03 பதவிகள் மேலதிகமாகக் கானப்பட்டது. வெற்றிடமாக இருந்த பதவிகளில் 05 பதவிகள் நிறைவேற்றுத்தர பதவிகள் என்பதுடன் 2017 ஆகஸ்ட் 29 வரையிலும் குறித்த பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. எவ்வாராயினும் பதில் கடமை அடிப்படையில் அப்பதவிகளின் கடமைகள் மேவுகை செய்யப்பட்டிருந்தன. பணிப்பாளர் (நிதி மற்றும் விலை கோரல்) பதவி வெற்றிடமாக்க கானப்படுலதனால் நிதிசார் அதிகாரங்களை வழங்குதல் தொடர்பாக மற்றும் நிறுவனத்தின் விலை கோரல் நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்வதற்குத் தடையாக உள்ளது.

5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

5.1 நிதி அறிக்கைகளை சமர்ப்பித்தல்.

2003 ஜுன் 02 ஆம் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சியாண்மை சுற்றறிக்கையின் 6.5.1. பந்தியின் பிரகாரம் மீளாய்வு வருடத்திற்கான நிதி அறிக்கைகள் மற்றும் நகல் வருடாந்த அறிக்கை கண்க்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனினும் 2016 ஆம் வருடத்தின் நிதி அறிக்கைகள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது 65 தினங்கள் தாமதமாக 2017 மே மாதம் 05 ஆம் திகதியாகும்.

5.2 பெறுகைத் திட்டம்

சபையினால் பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்தும் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2.1 மற்றும் 4.2.2 பந்தியின் பிரகாரம் விபரமான பெறுகைத் திட்டமொன்று மற்றும் பெறுகை நேர அட்டவனையொன்று தயார்படுத்தப்பட்டிருக்கவில்லை.

5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்குரிய பாதீடு செய்யப்பட்ட செலவினத்தை உள்ளபடியான செலவினத்துடன் ஒப்பீடு செய்தபோது 10 வீதத்திலிருந்து 189.2 வீதம் வரையிலான முரண்பாடுகள் அவதானிக்கப்பட்டதனால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பான குறைபாடுகள் தொடர்பாக ஆணைக்குழுவின் தலைவருக்கு அவ்வப்போது தெரியப்படுத்தப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விஷேட கவனம் செழுத்தப்படுதல் வேண்டும்.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
| --- | --- |
| (அ) பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் | கேள்வி கோரலின் மூலம் பிரயாணிகள் சேவை அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்படாமை.<br><br>தாமதப்படுத்தி அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்,அனுமதிப்பத்திரங்கள் தொடர்பாக நாளதுவரைப்படுத்தல் தகவல்கள் உள்ளடங்கிய இடாப்புக்களைப் பேனாமை. |
| (ஆ) கேள்வி கோரல் நடவடிக்கைகள் | விபரமான கேள்வி கோரல் திட்டமொன்றை தயாரிக்காமை மற்றும் கேள்வி கோரல் வழிமுறைகளை பேனாமல் கேள்விகோரல் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் |
| (இ) பதவியணியினர் நிர்வாகம் | வெற்றிடங்களுக்காக ஊழியர்களை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்காமை. |
| (ஈ) நிதிக் கட்டுப்பாடு பெற்றுக்கொள்ளப்பட்ட | திறைசேறியிலிருந்து<br><br>நிதியினை உரிய விடயங்களுக்காக பயன்படுத்தாமை |

ஒப்பம்./எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

எச்.எம்.காமிணி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் அதிபதி

**தேசிய போக்குவரத்து ஆணைக்குழு**
**2016 திசெம்பர் 31ஆந் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக 1971 இல 38ஐக் கொண்ட நிதிச் சட்டத்தின் 14(2) (சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள்**

## 2.2.1 கணக்கீட்டுக் குறைப்பாடுகள்

(அ) பல்வேறு நடைமுறைப் பிரச்சினைகள் காரணமாக 2016ஆம் ஆண்டிற்குரிய சிசு செரிய, கெமி செரிய, நிசி செரிய பற்றுச் சீட்டுக்களை கணக்குப் பிரிவிற்கு அனுப்பி வைப்பதற்கு முடியாமல் போயுள்ளதால், 2016ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போதுஉரிய செலவிற்கான ஏற்படுகளை ஒதுக்க முடியாதிருந்தது. 2017ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது உரிய திருத்தத்தினை மேற்கொள்வதற்கு அவதானத்திற் கொள்ளப்பட்டது.

(ஆ) 2016ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது கணக்குப் பிரிவிற்கு பற்றுச் சீட்டுக்களை முன்வைப்பதற்கு முடியாமல் போயினும், பின்னர் கொடுப்பனவிற்காக முன்வைக்கப்பட்டு செலுத்த வேண்டியிருந்த 30,080 ரூபா பற்றுச்சீட்டுக்கான ஏற்பாடுகளை ஒதுக்க முடியாமல் போனது. 2017ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது உரிய திருத்தத்தினை மேற்கொள்வதற்கு அவதானத்திற் கொள்ளப்பட்டது.

(இ) 2015ஆம் ஆண்டிற்குரிய பெஸ்ரியன் மாவைத்தையில் உள்ள மலசலகூடத் தொகுதியின் வருவாயினைக் கணக்கிலிடும் போது 2015 திசெம்பர் மாதத்திற்குரிய வருமானம் 577,500.00 ரூபா தொகை 2015ஆம் ஆண்டின் வருமானமாக் கணக்கிலிடுவதற்கு தவறியுள்ளது. 2017ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது உரிய திருத்தத்தினை மேற்கொள்வதற்கு அவதானத்திற் கொள்ளப்பட்டது.

(ஈ) விசாரணையில் குறிப்பிட்டுள்ளவாறு பேருந்துக் கட்டணத் திருத்தம் தொடர்பில் வெளியிடப்பட்ட பத்திரிகை அறிவித்தலுக்காகச் செலுத்தப்பட்ட பணம் நேர அட்டவணை தயாரிக்கும் செலவாகக் குறிக்கப்படவில்லை எனத் தயவுடன் அறிவிக்கின்றேன். பேருந்துக் கட்டணத் திருத்தம் தொடர்பில் வெளியிடப்பட்ட பத்திரிகை அறிவித்தலுக்கான செலவிற்காக பேருந்துக் கட்டண முரண்பாடுகளை அகற்றும் செயற்றிட்டத்தினால் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், அதன் பிரகாரம் 2016ஆம் ஆண்டில் பேருந்துக் கட்டணத் திருத்தம் தொடர்பில் வெளியிடப்பட்ட பத்திரிகை அறிவித்தலுக்காகச் செலுத்தப்பட்ட பணம் பேருந்துக் கட்டண முரண்பாடுகளை அகற்றும் செயற்றிட்டத்தின் கீழ் காட்டப்பட்டுள்ளது.

(ஊ) விசாரணையில் குறிப்பிட்டுள்ள 05 வீதி அனுமதிப் பத்திரங்களுக்கு உரிய வருமானத்தில் 2017ஆம் ஆண்டிற்குரிய பங்கு விலைமனு வீதி அனுமதிப்பத்திர வருமானத்திலிருந்து அகற்றி முற்பண வருமதிக் கணக்கிற்கு மாற்றப்படுதல் தவறப்பட்டுள்ளதுடன், 2017ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது உரிய திருத்தத்தினை மேற்கொள்வதற்கு அவதானத்திற் கொள்ளப்பட்டது.

(எ) விசாரணையில் குறிப்பிட்டுள்ள தளபாடங்களில் ஆகுசெலவு 308,870.00 ரூபாவான தளபாடங்கள், மீளாய்வாண்டின் போது அகற்றப்பட்டன. அவ்வாறு அகற்றப்பட்ட தளபாடங்களுக்கு உரிய தேய்மானங்களை அகற்றி மீளாய்வாண்டிற்குரிய தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் தேய்மானம் கணக்கில் வைக்கப்பட்டுள்ளதுடன், விசாரணையில் குறிப்பிட்டுள்ளவாறு தேய்மானம் கழித்து கணக்கில் வைக்கப்படவில்லை என்பதை அறிவித்துக் கொள்கின்றேன்.

(ஏ) விசாரணையில் குறிப்பிட்டுள்ளவாறு, கணினி மற்றும் உதிரிப்பாகங்களுக்கு தேய்மானப் பெறுமதி 6,059.00 ரூபா கழித்து கணக்கில் வைக்கப்பட்டுள்ளமை தவறுதலால் ஆகும். 2017ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது உரிய திருத்தத்தினை மேற்கொள்வதற்கு அவதானத்திற் கொள்ளப்பட்டது.

(ஐ) விசாரணையில் குறிப்பிட்டுள்ள பற்றுச் சீட்டுக்ள கணக்குப் பிரிவிற்கு முன்வைக்கப்படாமையால், அக்கொடுப்பனவிற்கான ஏற்பாடுகளை ஒதுக்க முடியாது போயுள்ளது.

### 2.2.2 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

(அ) ஆணைக்குழுவின் வாகனங்கள்

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிற்குரிய வாகனங்களின் எரிபொருள் பயன்பாட்டுப் பரிசோதனை இலங்கை போக்குவரத்துச் சபையின் தொழிற்சாலைப் பொறியிலாளரின் ஆலோசனை மற்றும் பரிசோதனையின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், ஏற்கனவே அறிக்கையும் கிடைக்கப் பெற்றுள்ளது. அதன் பிரகாரம் ஒவ்வொரு வாகனத்தினதும் எரிபொருள் பாவனை குறித்து விபரத்தினைப் பேணுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறே, ஒவ்வொரு வாகனம் தொடர்பிலும் வெவ்வேறாகக் கோவைகள் பேணப்படுகின்றன.

(ஆ) அமைச்சிடமிருந்து கையகப்படுத்திய வாகனங்கள்

போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் மூலம் 2,100,000.00 ரூபா தொகைக்கு கையகப்படுத்திய புஊ-0304 இலக்கத்தைக் கொண்ட ஜீப் வண்டியைக் கொள்வனவு செய்யும் போது ஒடோ மீட்டர் செயலிழந்து இருந்தமையால் பதிவுப் புத்தகங்களைச் செயற்படுத்துவதற்கு கடினமாக இருந்ததுடன், உரியமுறையில் மாதாந்த ஓட்டச் சுருக்கத்தினைப் பேணுவதற்கு கடினமாக இருந்தது.

எனினும், விலைகள் கோரப்பட்டு ஒடோ மீட்டர் ஒன்றினைப் பொருத்துவதற்கு ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதால், எதிர்காலத்தில் பதிவுப் புத்தகத்தையும் மாதாந்த ஓட்டச் சுருக்கத்தினையும் பேணுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதுவரை இந்த ஜீப் வண்டி நிறுவனத்தின் அலுவலகத் தேவைகளுக்காக குறுந்தூர பயணங்களில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன், அவ்வோட்ட விபரம் நாளாந்தக் குறிப்புப் புத்தகத்தில் பதியப்பட்டுள்ளது.

(இ) மடிக்கணினிகள்

கணக்காய்வு விசாரணையின் போது காட்டப்பட்டுள்ளவாறு உரிய ஆண்டினுள் 05 மடிக்கணினிகள் முகாமையின் தேவையின் படியும், 03 கணினிகள் காலாவதியாகி மென்மேலும் பாவனைக்கு உகந்த நிலையில் இல்லாத மட்டத்தில் உள்ள 03 கணினிகளுக்கு பதிலீடாக்கும் நோக்கத்திலும் கொள்வனவு செய்யப்பட்டதுடன், குறிப்பிட்ட கொள்வனவிற்கு தேவையான குறிப்புகளுடன் கூடிய கோரிக்கைக் கடிதம் கொள்வனவுப் பிரிவிற்கு அனுப்பி வைத்துள்ளதாக அறிவித்துக் கொள்கின்றேன்.

(ஈ) வீதி அனுமதிப்பத்திரக் கட்டணங்கள்

வீதி அனுமதிப் பத்திரக் கட்டணங்களைத் தீர்மானிப்பதற்கு உரிய அனுமதிகளின் பிரதிகள் இத்துடன் அனுப்பப்பட்டுள்ளதாக தயவுடன் அறிவிக்கின்றேன். (இணைப்பு 01 - 1 முதல் 01- ஏஜஜ வரை)

### 2.2.3 சட்டதிட்டங்கள,நிபந்தனைகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

(அ) தற்காலிக மேலதிகப் பணத்தினை முதலீடு செய்வதற்கு திறைசேரியின் அனுமதியினைப் பெறுவதற்காக தனியார் போக்குவரத்துச் சேவைகள் அமைச்சினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (உரிய கடிதத்தின் பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் இல ஆர்ரீ.'.பீ.'.என்ரீசீ.'.எவ்ஏ.'.2012.'.22 கொண்ட கணக்காய்வு விசாரணைக்கான பதிலுடன் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டுள்ளது.)

எவ்வாறெனினும் 2012 ஆகஸ்ட் மாதம் 22ஆந் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் தொடர்பிலான பொதுக் கூட்டத்தின் போது, குறுகிய கால மேலதிக நிதியங்கள் ஏழு நாள் கோரல் வைப்புக்களில் முதலீடு செய்வதற்குப் பதிலாக ஒரு பகுதியினை கூடிய வட்டி வருமானத்தைப் பெறுவதற்காக நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (பொது முயற்சிகள் தொடர்பிலான பொதுக்

கூட்டத்தின் குறிப்புக்களின் பிரதியொன்று இல ஆர்ரீ.ீ.பீ.ீ.என்ரீசீ.ீ.எவ்ஏ.ீ.2012.ீ.22 கொண்ட கணக்காய்வு விசாரணைக்கான பதிலுடன் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டுள்ளது.)

(ஆ) தேசிய போக்குவரத்து ஆணைக்குழு சம்பளங்கள் மற்றும் மீண்டெழும் செலவுகளுக்கு திறைசேரியின் ஏற்பாடுகள் பெற்றுக் கொள்ளப்படாததுடன், தொழிற்படு மூலதனத் தேவைக்காக மேலதிக வருமானத்தில் ஒரு பகுதி நிறுத்திவைக்கப்படும். அவ்வாறே தேசிய போக்குவரத்து ஆணைக்குழு செயற்படுத்தும் செயற்றிட்டங்கள் தொடர்ச்சியாகச் செயற்படுத்தப்படும் செயற்றிட்டங்கள் என்பதால், அச்செயற்றிட்டங்களைத் தொடர்ச்சியாக மேற்கொள்வதற்கு திறைசேரி ஏற்பாடுகள் கிடைக்கும் வரை செலவுகளை மேற்கொள்ள வேண்டியுள்ளதுடன், அதற்கு நிறுத்தி வைக்கப்பட்ட மேலதிக வருமானம் பயன்படுத்தப்படுவதுடன், 2017ஆம் ஆண்டில் பெறப்பட்ட பணிப்பாளர் சபை தீர்மானத்தின் பிரகாரம் அவ்வாறு நிறுத்தி வைக்கப்பட்ட மேலதி வருமானத்தில் 200 மில்லியன் ரூபா தொகை பொதுத் திறைசேரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கின்றேன்.

(இ) தற்பொது தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் சேமலாப நிதிய மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய பங்களிப்புத் தொகைகளைக் கணக்கிடும் போது காணக்காய்வினால் காட்டப்பட்டுள்ள சரியான முறைமையினைப் பின்பற்றுவதாக தயவுடன் அறிவிக்கின்றேன்.

## 4.1 செயலாற்றுகை

01) போக்குவரத்து அமைச்சின் கீழ் செயற்படுத்தப்படும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு 2009ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்ட தேசிய போக்குவரத்து கொள்கையின் கீழ் தமது பணிகளை நிறைவேற்றினும், தனியார் போக்குவரத்து அமைச்சு என பிரத்தியேகமான அமைச்சொன்றினை நிறுவியதன் பின்னர் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அவ்வமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டது. அதன் போது தனியார் போக்குவரத்து அமைச்சினால் புதிய தேசிய போக்குவரத்து கொள்கையொன்று வரையப்பட்டு அமைச்சரவைக்கு அனுப்பி வைக்கப்படினும் போக்குவரத்திற்கான புதிய கொள்கையொன்றல்ல 2009 முதல் அமுலில் உள்ள தேசிய போக்குவரத்துக் கொள்கைக்குத் தேவையெனின் திருத்தங்களைச் சேர்க்குமாறு அமைச்சரவையினால் தீர்மானிக்கப்பட்டது. எனினும், தனியார் போக்குவரத்து அமைச்சு 2015ஆம் ஆண்டில் கலைக்கப்பட்டதுடன், தேசிய போக்குவரத்து ஆணைக்குழு மீண்டும் போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் கீழ் கொண்ட வரப்பட்டது. அதன் படி தேசிய போக்குவரத்து ஆணைக்குழு போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சுடன் இணைந்து புதிய தேசிய போக்குவரத்துக் கொள்கையினைத் தயாரிப்பதற்கு தற்போது நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், அதற்கான கூட்டங்கள் பல போக்குவரத்துடன் தொடர்புடைய நிறுவனங்களுடன் நடாத்தப்பட்டுள்ளன. அதன் பிரகாரம், தேசிய போக்குவரத்துக் கொள்கையின் வரைவு இவ்வாண்டினுள் தயாரிப்பதற்கு இயலுமாக இருக்கும்.

அவ்வாறே, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் 2009ஆம் ஆண்டில் தேசிய போக்குவரத்துக் கொள்கையினை வெளியிடுவதற்கு மேலதிகமாக 2011ஆம் ஆண்டு முதல் தேசிய போக்குவரத்து புள்ளிவிபர அறிக்கையினை தொடர்ச்சியாக 2016ஆம் ஆண்டு வரை வெளியிட்டுள்ளது. அவ்வறிக்கைகள் மூலம் 2011ஆம் ஆண்டு முதல் போக்குவரத்து குறித்து ஒவ்வொரு துறைகளிலும் எண்ணிக்கை ரீதியாக ஏற்பட்டுள்ள மாற்றங்கள் குறித்து தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன.

(அ) 2016ஆம் அண்டு ஆரம்பமாகையில் 16 கெமி செரிய சேவைகள் செயற்படுத்தப்பட்டதுடன், அவ்வாண்டினுள் ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட 40 பதிய சேவைகள் ஆகிய எல்லா சேவைகளுக்கும் கொடுப்பனவு செய்யும் நோக்கில் 23.5 மில்லியன் ரூபா தொகை ஒதுக்கப்பட்டது.

சேவைகயின் எண்ணிக்கை 03 வரை குறைவடைவதற்கும் பணம் மீதமாவதற்கும் காரணங்கள்:-

- சேவையொன்றிற்கு நிவாரணக் கொடுப்பனவு 3 வருடத்திற்கு மட்டுப்படுத்தப்படுவதால், 3 வருட ஒப்பந்த கால இறுதியில் கெமி செரிய செயற்றிட்டத்திலிருந்து வெளியேறுதல் மற்றும் சாதாரண சேவையாக மேற்கொள்ளுதல்.

- கெமி செரிய சேவைகள் செயற்படுத்தப்படும் சில கஷ்டபபிரதேச பாதைகளில் இபோச பேருந்துகளை ஈடுபடுத்துவதன் காரணமாக கெமி செரிய சேவை செயலிழப்பதால் ஓடுவதிலிருந்தும் தவிர்ந்து கொள்ளல்.

- பாதைகள் சீரற்று சிதைவுற்றிருப்பதால் பேருந்துகள் அடிக்கடி தொழில்நுட்பக் கோளாறுகளுக்கு ஆளாவதன் காரணமாக உரியமுறையில் சேவயினை மேற்கொள்வதற்கு ஆடியாமையால் பேருந்துகள் ஓடுவதைத் தவிர்த்தல்.

- கெமி செரிய புதிய சேவைகளை ஆரம்பித்தல் என்பது ஒரு நீண்ட கால செயல்முறையின் விளைவு என்பதாலும் 2016ஆம் ஆண்டினுள் அச்செயன்முறையினை முடிவுறுத்துவதற்கு முடியாமை.

- சில பாதைகளுக்கு விலைமனு கோரிய போதும் கோரல்கள் முன்வைக்கப்படாமை

- மாகாண போக்குவரத்து அதிகார சபையினால் கெமி செரிய செயற்றிட்டத்திற்கு முன் வைக்கப்பட்ட ஆலோசனைகளின் அளவு குறைதல்.

அவ்வாறே புதிய சேவைகளை ஆரம்பிக்கும் நோக்கில் ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உரிய ஆண்டினுள் நாட்டின் எல்லா மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபைக்கு புதிய ஆலோசனைகளை முன்வைக்குமாறு அறிவித்து கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. அதன் பிரகாரம், கிடைத்த பதில்களில் முதலில் மத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களினால் முன்மொழியப்பட்ட பாதைகளில் கருத்தய்வு நடாத்தப்பட்டு தெரிவுசெய்யப்பட்ட 11 பாதைகளுக்கு கெமி செரிய சேவைகள் அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு விலைமனு கோரப்பட்டுள்ளது.

(ஆ) ஒன்றிணைந்த நேர அட்டவணைகளைச் செயற்படுத்துவதற்கு மற்றும் பிரதானமாக 2016ஆம் ஆண்டில் கெமி செரிய சேவையினை விரிவாக்குதவதற்கு எல்லா மாகாணங்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் விதத்தில் நாடு முழுதும் ஆய்வுகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. எனினும், மீளாய்வாண்டினுள் ஒன்றிணைந்த நேர அட்டவணைகளைச் செயற்படுத்த முடியாது போனதுடன், புதிய கெமி செரிய சேவைகளுக்கான ஆய்வுகளை இரண்டு மாகாணங்களில் மாத்திரமே மேற்கொள்ள முடிந்தது.

அவ்வாறே அதிவேகப் பாதைகளில் மற்றும் ஏனைய தூரப்பயண பேருந்துச் சேவைகள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் ஆய்வு நடவடிக்கைகளுக்குத் தேவையான ஊழிய வலுவினைப் பெற்றுக் கொள்வதற்கு பொருத்தமான அலுவலர்கள் போதிய அளவில் இல்லாமையும் மேற்கொள்ள எதிர்பார்க்கப்பட்ட ஆய்வுகளின் அளவு குறைவடைவதற்கு ஏதுவாகியது.

(இ) மாகாணங்களுக்கு இடையிலான பாதைகளுக்கு 2012ஆம் ஆண்டிலேயே நேர அட்டவணைகளைத் தயாரித்து முடிக்கப்பட்டது. எனினும், இலங்கைப் போக்குவரத்துச் சபையின் கடும் எதிர்ப்பின் காரணமாக அந்நேர அட்டவணைகளைச் செயற்படுத்தவதற்கு முடியாமல் போனது. தயாரிக்கப்பட்ட நேர அட்டவணைகளை தற்போதைய பயணிகள் கேள்விகளுக்கு அமைய பொருத்தமுடையாக இருத்தல் வேண்டும். அதனால், ஒவ்வொரு வருடமும் தயாரிக்கப்பட வேண்டிய நேர அட்டவணைகளாக அனைத்து மாகாணங்களுக்கும் இடயிலான பாதைகளின் எண்ணிக்கை காட்டும். இலங்கைப் போக்குவரத்துச் சபை ஒன்றிணைந்த நேர அட்டவணைகளைத் தயாரித்தல் தரவுகளைப் பெற்றுக்கொடுப்பதில் தாமதம் மற்றும் தயாரிக்கப்பட்ட நேர அட்டவணைகளைச் செயற்படுத்தவதற்கு நடவடிக்கை எடுக்காமை ஆகிய காரணத்தால் 2016ஆம் ஆண்டில் தயாரிக்க முடியுமான நேர அட்டவணைகள் 234 மாத்திரமே.

(ஈ) 2016ஆம் ஆண்டினுள் மட்டுப்படுத்தப்பட்ட நிறுத்துமிடப் பெயர்ப்பலகைகளைப் பொருத்தவதற்கு முடியாது போயினும், கொழும்பு-கண்டி, கொழும்பு- அவிசாவளை, பாணந்துறை-கண்டி ஆகிய சில பாதைகளில் பெயர்ப் பலகைகளைப் பொருத்தும் இடங்களை இனங்காணல் ஆகிய பல்வேறு பணிகள் பல மேற்கொள்ளப்பட்டன. எனினும், பலகைகளில் குறிக்க வேண்டிய சமிக்ஞை குறியீடுகள் குறித்து இதுவரை இறுதித் தீரமானங்களுக்கு வந்திராததால், இது வரை பொருத்த முடியாதுள்ளது. போக்குவரத்து

மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் செயலாளரால் மோட்டார வாகனப் போக்குவரத்து ஆணையாளருக்கு இச்சமிக்ஞை குறியீடுகளைத் தயாரித்து வர்த்தமானயில் வெளியிடுமாறு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

(உ) யாழ்ப்பான பேருந்துத் தரிப்பிடத் தொகுதிக்கு ஆரம்பத்தில் உத்தேசிக்கப்பட்ட உத்தேச காணி மாற்றமடைந்ததுடன், புதிய உத்தேச காணி இது வரையில் தீர்வாகவில்லை.

(ஊ) கிளிநொச்சி, மெதிரிகிரிய பேருந்துத் தரிப்பிடங்களின் உத்தேசிக்கப்பட்ட காணிகளுக்கு நிலஅளவையியல் திட்டம் தாமதமாகியமையால், கொள்வனவு நடவடிக்கைகளை மேற்கொள்வது தாமதமாதல். மெதிரிகிரிய பேருந்துத் தரிப்பிடத்தின் பணிகள் முடிவடைந்துள்ளதுடன், கிளிநொச்சி பேருந்துத் தரிப்பிட நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(எ) ஜீபிஎஸ் செயற்றிட்டம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கமிட்டியின் அறிவுறுத்தல் பிரகாரம் புனரமைப்பு செய்யப்பட்டதுடன், அதற்கு இணங்க எல்லா ஜீபிஎஸ் உபகரணங்களையும் பொருத்துதல் மற்றும் பராமரித்தல் முறையாகப் பேணுவது உரிய அனுதிப்பத்திரத்தினைக் கொண்ட பேருந்து உரிமையாளர்களின் பொறுப்பாகும். அதன் படி தேசிய பொக்குவரத்து ஆணைக்குழுவினால் இது சில படிமுறைகளின் கீழ் மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், அதில் முதன்மையாக எல்லா அதிவேகப் பாதையில் ஓடும் பேருந்துகளிலும் ஏனைய பாதைகளில் ஓடும் அதி சொகுசு பேருந்துகளிலும், சொகுசுப் பேருந்துகளிலும் ஜீபிஎஸ் உபகரணங்கள் பொருத்தப்பட்டிருப்பது கட்டாயம் என அறிவித்து அதனைச் செயற்படுத்துவதற்கு உரிய அனுமதிப்பத்திரதாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதன் படி தரவுப் பரிமாற்ற சிம் அட்டைகளை வழங்குதல் மேற்கொள்ளப்பட்டதுடன், கணக்காய்வு விசாரணையில் காட்டப்பட்டுள்ள சிம் அட்டைகளின் எண்ணிக்கை 438 எனக் குறிப்பிட்டுள்ளமை அப்போது ஜீபிஎஸ் உபகரணங்கள் செயற்படுத்தப்படும் பேருந்துகளின் எண்ணிக்கையாவதுடன், 2100 எனக் குறிப்பிட்டுள்ளது அப்போது பொருத்தப்பட்டிருந்த மொத்த பேருந்துகளின் எண்ணிக்கையாகும். அதன் படி, அப்போது ஜீபிஎஸ் உபகரணங்கள் செயலிழந்த பேருந்துகளின் எண்ணிக்கை 79மூஆகக் குறிப்பிடலாம். மேற்படி காட்டப்பட்டுள்ளவாறு தற்போது படிப்படியாக ஜீபிஎஸ் உபகரணங்கள் செயலிழந்த பேருந்துகளை மீண்டும் செயற்படுத்துதல் மற்றும் பொருத்தப்பட்டிராத பேருந்துகளில் உபகரணங்களைப் பொருத்துவதற்கு உரிய அறிவுறுத்தலை அனுமதிப்பத்திரதாரிகளுக்கு வழங்கி, அது நல்ல கண்காணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தற்போதைக்கு அதிவேகப் பாதையில் ஓடும் எல்லா பேருந்துகளிலும் மற்றும் ஏனைய பாதைகளில் ஓடும் அதி சொகுசு பேருந்துகளிலும், சொகுசுப் பேருந்துகளிலும் குறிப்பிட்ட பொருத்துதல்கள் மற்றும் ஜீபிஎஸ் செயற்படும் நிலைமைக்கு எடுத்தல் என்பன நடைபெறுகின்றன. ஜீபிஎஸ் மூலம் பேருந்துகளை ஒழுங்குபடுத்தவதற்கு தேவையான அதிகாரிகளுக்கான அனுமதியினைப் பெற்றதன் பின்னர் இவ்வுதிரிப்பாகங்கள் அனைத்தும் பேருந்துகளில் பொருத்தப்பட்டு ஒழுங்குபடுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

## 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

(அ) விசாரணையில் குறிப்பிட்டுள்ளவாறு 2016ஆம் ஆண்டில் மூலதனச் செலவு மதிப்பீட்டினுள் உள்ளடங்கிய மெதிரிகிரிய பேருந்துத் தரிப்பிட நிர்மாணப் பணிகளுக்கு 2016ஆம் ஆண்டு அரை இறுதியில் (2016.10.26) ஒப்பந்தம் வழங்கப்பட்டதால், அவ்வாண்டில் எதிர்பார்க்கப்பட்ட கொடுப்பனவிற்கு பற்றுச் சீட்டு கிடைக்கப் பெறாததுடன், 5.6 மில்லியன் ரூபா (5,605,632.94) தொகை பற்றுச் சீட்டுக்கு செலுத்தப்பட்டது.

மேலும், வவுனியா பேருந்துத் தரிப்பிடத்தின் கட்டம் ஏை இற்கு உரிய எதிர்பார்க்கப்பட்ட பற்றுச் சீட்டு 2016 இறுதிக் காலண்டில் கிடைக்காமையால் இத்தொகைப் பணம் மீதமாவதற்கு ஏதுவாகியது.

2016ஆம் ஆண்டில் மூலதனச் செலவு மதிப்பீட்டினுள் ஹிங்குரக்கொட பேருந்துத் தரிப்பிட நிர்மாணிப்பு மற்றும் பெஸ்ரியன் மாவத்தை நவீனமயப்படுத்தலும் அடங்கவில்லை.

எனினும், அவ்விரு பணிகளும் 2016ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படாமைக்கான காரணங்கள் பின்வருமாறு.

ஹிங்குரக்கொட பேருந்துத் தரிப்பிட நிர்மாணிப்பிற்கு நகர அபிவிருத்தி அதிகார சபையினால் தயாரிக்கப்பட்ட திட்டத்திற்கு அனுமதி கிடைக்காததுடன், அந்நிர்மாணிப்பிற்கான புதிய திட்டமொன்று அரச பொறியிற் கூட்டுத்தாபனத்தினால் அமைக்கப்பட்டு அதற்குரிய அனைத்து நடவடிக்கைகளும் மீண்டும் மேற்கொள்ளப்பட்டதால் 2016ஆம் ஆண்டில் கொள்வனவு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முடியவில்லை. தற்பொது நிர்மணிப்புப் பணிகள் ஒப்பந்தகாரர்களுக்கு வழங்கப்பட்டு ஆகஸ்ட் 31ஆந் திகதியில் வேலைத்தளம் அவர்களுக்கு பொறுப்புச் சாட்டப்படவுள்ளது.

பெஸ்ரியன் மாவத்தை புதிய தொகுதி விரைவாக அமைக்கப்படும் என எதிர்பார்க்கப் -பட்டமையால் நவீனமயமாக்கல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

விசாரணையில் குறிப்பிட்டுள்ள 43 மில்லியன் ரூபா மூலதனச் செயற்றிட்டத்திற்கான திறைசேரி ஏற்பாடுகளாக 2016 செப்தெம்பர் 01ஆந் திகதி தேசிய போக்குவரத்து ஆணைக்குழு வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. அப்பணக் கொடுப்பனவு ஒரே முறையில் மேற்கொள்ளப்படாமையால், மொத்தப் பணமும் நடைமுறைக் கணக்கில் வைத்தல் பொருளாதாரப பயனற்றதால், நிறுவனம் சாதாணமாகப் பின்பற்றும் முறையான குறுங்கால முதலீடாக மேற்கொள்ளும் முறையான பொதுத் திறைசேரியில் சுநீழுஇல் வைப்புச் செய்தல் மேற்கொள்ளப்பட்டது.

2016.12.31 ஆந் திகதியாகையில் மூலதனச் செயற்றிட்டத்திற்காக பொதுத் திறைசேரியிலிருந்து பெறப்பட்ட மொத்த ஏற்பாடுகள் 75,000,000.00 மி. ரூபாவாகுவதுடன், மூலதனச் செயற்றிட்டத்திற்காக 2016.12.31 ஆந் திகதியாகையில் மேற்கொள்ளப்பட்ட மொத்தச் செலவு 72,268,346.67 ரூபாவாகும். மீதிப் பணம் பொதுத் திறைசேரிக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளது.

அதன் படி வசாரணையில் குறிப்பிட்டுள்ள திறைசேரி ஏற்பாடுகள் 43 மில்லியன் ரூபா தொகை 2016 ஆம் ஆண்டில் திம்பர் 31ஆந் திகதி வரை நிதி பெற்றுக் கொண்ட செயற்றிட்ட நோக்கங்களுக்காக செலவிடாது குறுங்கால முதலீடாக மேற்கொள்ளப்படவில்லை எனத் தயவுடன் அறிவித்துக் கொள்கின்றேன்.

(ஆ) 2016ஆம் ஆண்டிற்கு தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் மீண்டெழும் செலவுக்காக 600 மில்லியன் ரூபா தொகை வரவுசெலவு மதிப்பீட்டொன்று தயாரிக்கப்பட்டிருந்ததுடன், அதன் படி அரசின் பொதுத் திறைசேரியிலிருந்து 460 மி. ரூபா பணம் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது.

சிசு செரிய நிவாரணக் கொடுப்பனவு முறையின் கீழ் சேவைகளை வழங்கும் பேருந்து ஓட்டுனர்களுக்கு மாதாந்தம் சாதாரய முறையில் நிவாரணத் தொகையினைச் செலுத்தும் போது உரிய மாதத்திற்கான தேபோஆ அலுவலகத்திற்கு குறிப்புப் பதிவேட்டுப் பத்திரங்களைப் பெற்றுக் கொடுக்க வேண்டியது பிறகு வரும் மாதத்திலிருந்து 60 நாட்களுக்குள் ஆகும். அதன் படி 02 மாதங்கள் வரை குறிப்புப் பதிவேட்டுப் பத்திரங்கள் ஏற்கப்படும். அவ்வாறு குறிப்புப் பதிவேட்டுப் பத்திரங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர் 02 மாதங்களுக்குப் பின்னர் நிவாணத் தொகையைச் செலுத்தவதற்கான சந்தர்ப்பங்கள் பல உண்டு. அதன் பிரகாரம், நிவாரணக் கெபாடுப்பனவை வழங்குவதற்கு 04 மாதத்திற்குப் பின்னரான சந்தர்ப்பம் உள்ளதென்பது தெளிவாகும்.

சேவை ஒப்பந்த நிபந்தனைகளுக்கு அமைய சேவையினை வழங்கிய நாட்கள் சதவீதமாகக் கணக்கிட்டுப் பார்க்கையில் 90மூ பூர்த்தியடையாத சந்தர்ப்பங்களில் நிவாரணத் தொகை செலுத்தப்படாததுடன், மாதாந்தம் 90மூ - 99மூ இடையினான வீதத்தில் சேவையினை வழங்கும் சந்தர்ப்பங்களில் மேலதிக அறவீடு விதிக்கப்பட்டு உரிய நிவாரணத் தொகையிலிருந்து இந்த மேலதிக அறவீட்டுத் தொகையைக் கழித்து உரிய ஓட்டுனர்களுக்கு கொடுப்பனவு செய்யப்படும். இதற்கு மேலதிகமாக உரிய ஆவணங்கள் போக்குவரத்து அதிகார சபைகளினால் முறையாக முன்வைக்கப்படாமை, உரிய ஓட்டுனர்களால் பேருந்துகளின் உடைமையுரிமை உறுதிச் செய்யப்படாமை மற்றும் உண்மையானவை என்பதாக ஏற்றுக்

கொள்ளப்படாத ஆவணங்களை முன்வைத்தல் போன்ற விடயங்கள் காரணமாக உரிய நிவாரணத் தொகையினைச் செலுத்தாமையால் மதிப்பீடு செய்யப்பட்ட பணம் வருட இறுதியாகையில் உரிய ஓட்டுனர்களுக்கு முழுமையாகச் செலுத்த முடியாதுள்ளது.

இதற்கு மேலதிகமாக, 2016ஆம் ஆண்டினுள் புதிய சேவையொன்றினை ஆரம்பிக்கும் போது போக்குவரத்து அதிகார சபைகள் அறிவுறுத்தப்படினும், உரிய ஆவணங்களை வரவழைப்பிப்பதற்கு 03 மாத காலத்திற்கும் மேற்பட்ட காலம் எடுத்தமையால் புதிய சேவைகளை (25ஐ விடக் கூடுதலான சேவைகள்) ஆரம்பிப்பதற்கு அதிக காலம் எடுத்தது. அதன் படி 2016 ஆகஸ்ட் மாதம் முதல் திசெம்பர் மாதம் வரையிலான காலத்தினுள் ஆரம்பிக்கப்பட்ட குறிப்பிட்ட சேவைகளுக்கு 2017ஆம் ஆண்டு ஆரம்பித்த பின்னரே பணக்கொடுப்பனவு வழங்க ஆரம்பிக்கப்பட்டது. ஏனெனின், புதிய சேவைகளை ஆரம்பிக்கும் போது நிறைய குறைபாடுகள் இருந்ததுடன், அவற்றை நிவர்த்தி செய்வதற்கு ஆலோசனை வழங்குவதற்கும் அதன் பின்னர் அச்சேவைகள் உரிய முறையில் மேற்கொள்ளப்படுகின்றனவா எனப் பரிசோதனை செய்வதற்கும் மீண்டும் தேபோஆ நடமாடும் பரிசோதனை அதிகாரிகளை ஈடுபடுத்தி பரிசோதிப்பதற்கும் ஏற்பட்ட காரணத்தால் பணக் கொடுப்பனவை ஆரம்பிப்பதற்கு அதிக காலம் எடுத்தது. அவ்வாறு நடைபெறும் போது வருட இறுதியில் நிவாரணத் தொகையைச் செலுத்தும் போக்கினைச் சமநிலைப்படுத்துவதற்கு முடியாதுள்ளது.

(இ) விலைமனு அல்லாத அனுமதிப்பத்திரங்களுக்கு 2011ஆம் ஆண்டிற்கு முன்னர் வழங்கப்பட்ட பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களின் வருடாந்தப் புதுப்பித்தல் கட்டணம் 3,000.00 ரூபாவும், 2011ஆம் ஆண்டின் பின்னர் விழலமனு அல்லாத உடைமையுரிமையை முறைப்படுத்துவதன் கீழ் வழங்கப்பட்ட பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களின் வருடாந்தப் புதுப்பித்தல் கட்டணம் 15,000.00 ரூபாவும் ஆகும்.அவ்வாறே விலைமனுப் பணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களின் வருடாந்தப் புதுப்பித்தல் கட்டணம் 3,000.00 ரூபாவாக இருப்பதுடன், வருடாந்த விலைமனுக் கட்டணமும் அறவிப்படும்.

ஏதேனும் ஒரு பாதைக்காக 2011ஆம் ஆண்டிற்கு முன்னர் அறவிடப்பட்ட நீடிப்பதற்கான கட்டணம் 3,000 ரூபாவாகும். எனினும், அப்பாதை தொழில்நுட்பப் பெறுமானம் மீது கட்டணம் அறவிடப்படாது பாதைகள் அல்லது சேவை திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட பயணிகள் சேவை அனுமதிப்பத்திரம் ஒன்றாயின் அதன் வருடாந்த புதுப்பித்தல் கட்டணம் 15,000 ரூபாவாகும்.

அவ்வாறே, அதிகமான பயணிகள் கேள்வியின் படி அப்பாதைக்கே விலைமனு கோரல் மூலம் அனுமதிப்பத்திரம் வழங்கப்படின், அல்லது தொழில்நுட்பப் பெறுமானம் மீது செம்மையாக்கப்பட்ட பயணிகள் சேவை அனுமதிப்பத்திரம் எனின், அவ்வனுமதிப்பத்திரங்களுக்கு உரிய வருடாந்த விலைமனுத் தொகை மற்றும் புதுப்பித்தல் கட்டணமாக 3,000 ரூபா தொகையும் அறவிடப்படும்.

(ஈ) 26.∴2017 பணிப்பாளர் சபைப் பத்திரத்தின் படி பணிப்பாளர் சபை அனுமதியின் பிரகாரம் அதிவேகப் பாதையில் தற்காலிக அனுமதிப்பத்திரத்திற்காக 2017.∴05.∴16ஆந் திகதி முதல் வருடாந்த தொழில்நுட்பப் பெறுமானம் மீது கட்டணத்தைத் தயாரித்து அதில் ஒரு நாளைக்கு அறவிட வேண்டிய பெறுமானத்தைக் கணக்கிட்டு அறவிடப்படும். அதனால், இந்நிலைமையின் கீழ் மேலும் நட்டம் ஏற்படாது எனக் குறிப்பிடுகின்றேன்.

(உ) இவ்வனுதிப்பத்திரங்களை வழங்குதலுக்கு விலைமனு படிமுறைகளின் கீழ் நடவடிக்கை எடுப்பதற்கு ஆணைக்குழு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதுடன், இதன் போது விலைமனு முறையின் கீழ் 30 பாதைகளுக்கான 141 அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக் கொடுப்பதற்கு உரிய விலைமனு கோரல் மேற்கொள்ளப்பட்டது. (விலைமனு இல 23இன் கீழ்) எனினும், பேருந்து உரிமையாளர்கள் ஒரு பகுதியினர் நீதிமன்றத்தில் வழக்கொன்றைத் தாக்கல் செய்ததன் காரணமாக மற்றும் நீதிமன்றக் கட்டளையின் பிரகாரம் விலைமனுவினை இரத்துச் செய்ய வேண்டியேற்பட்டது.

(ஊ) கணக்காய்வு விசாரணையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள மேற்படி விடயத்தின் கீழ் மீளாய்வாண்டின்

இறுதியில் இலத்திரனியல் தகவல் பலகைகளை இற்றைப்படுத்தி, மீண்டும் இணல்பு நிலைக்கு மாற்றுதல் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், அதற்குரிய எல்லா பராமரிப்பு நடவடிக்கைகள் மற்றும் அதன் செயற்பாட்டில் பொறுப்பு என்பன கொள்வனவுப் படிமுறைகளுக்கு இணங்க ஊடக நிறுவனத்திற்குப் பொறுப்புச் சாட்டுதல் மேற்கொள்ளப்பட்டது. இது வரையில் குறிப்பிட்ட 05 இலத்தினியல் தகவல் பலகைகள் இணல்பு நிலைக்கு கொண்டு வரப்பட்டுள்ளதுடன், அவற்றில் உரிய நேர அட்டவணைகள் மற்றும் ஏனைய தகவல்கள் காட்சிப்படுத்தப்படுகின்றன.

(எ) மேற்படி விடயத்தின் கீழ் காட்டப்பட்டுள்ளவாறு கமரா தொகுதியில் 03 கமராக்கள் மாத்திரம் செயற்படு நிலையில் காணப்படினும், ஏனைய கமராக்களை மீண்டும் செயற்படு நிலைமைக்கு கொண்டுவர முடியாத நிலையில் உள்ளன. அதனால் முகாமையால் குறிப்பிட்ட பேருந்துத் தொகுதியையே உள்ளடக்குமாறு புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய மற்றும் கூடிய கால உத்தரவாமிக்க கமரா தொகுதியொன்றினைப் பொருத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளதுடன், அதற்கு இணங்க நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(ஏ) இவ்விடயம் தொடர்பில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் பெஸ்ரியன் மாவத்தை பொது மலசலகூடத் தொகுதியினைப் பராமரித்தலுக்கான ஒப்பந்ம் செய்யப்பட்ட நிறுவனத்திற்கு (மேதா என்ரபிரைசஸ்) அனுப்பப்பட்ட எச்சரிக்கைக் கடிதம் தொடர்பில் குறிப்பிட்ட நிறுவன உரிமையாளர் 2016 நவம்பர் மாதம் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவரான என்னைச் சந்தித்து இதன் பின்னர் ஒப்பந்தத்திற்கமைய செயற்படுவதற்கு பொறுப்புக கூறுவதாக வாய்மொழி மூல இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

எனினும், 2017ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆந் திகதி தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் இந்நிறுவனத்திற்கு ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளை மீறுதல் தொடர்பில் எச்சரிக்கைக் கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டதுடன், அக்கடிதத்திற்கு ஒரிய நிறுவனம் திருப்தியடையக் கூடியவாறு பதிலைத் தந்திருக்கவில்லை. மேலும், 2017.05.5, 2017.06.29 ஆகிய திகதிகளில் மற்றும் கடந்த வருடத்திலும் தேபோ ஆணைக்குழவினால் இந்நிறுவனத்திற்கு எச்சரிக்கைக் கடிதங்கள் பல அனுப்பப்பட்டுள்ளன.

எனினும் மேதா எனரபிரைசஸ் நிறுவனத்தினால் இக்கடிதங்களின் படி நடவடிக்கை எடுக்காது ஒப்பந்தத்தின் பிரகாரம் முறையான விதத்தில் செயற்படுவதற்கு தவறியமையால், 2017.08.10ஆந் திகதி குறிப்பிட்ட ஒப்பந்தத்தினை முடிவுறுத்துவதற்கான அறிவித்தல் கடிதம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மேலும் அறியத்தருகின்றேன்.

(ஐ) பெஸ்ரியன் மாவத்தை பேருந்துத் தரிப்பிடத்தொகுதியின் மலசலகூடத் தொகுதி பொது வசதிகள் அளிக்கப்பட்டு 06 வருடங்களுக்கு பராமரிப்பினை மேற்கொள்வதற்கான விலைமனு கோரப்பட்டு 2010 செம்தெம்பர் மாதம் 06ஆந் திகதி மேதா என்ரபிரைசஸ் நிறுவனத்துடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

எனினும் இம்மலசலகூடத் தொகுதி பயணிக்கும் பொதுமக்கள் பயன்படுத்துவதற்கு சிரமங்களுக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்பட்டதால் 1.5 மில்லியன் ரூபா செலவழித்து இம்மலசலகூடத் தொகுதியினைத் தற்காலிகமாக திருத்துவதற்கு ஆணைக்குழு தீர்மானித்தது.

எனினும், தற்காலிக திருத்தத்தை விட மிகவும் நல்ல திருத்தம் ஒன்று தேவை என்பதால், மற்றும் உத்தேசிக்கப்பட்ட நகர அபிவிருத்தித் திட்டமொன்று காணப்படுவதாலும், பெரும் தொகையொன்றை ஆணைக்குழு செலவிடுவது சாதகமற்றது என்பதாலும், விலைமனுதாரர் முன்வைத்த காலத்திற்கு மேலதிகமாக 06 வருட காலத்திற்கு கால நீடிப்பு செய்யப்படின் மதிப்பீடு செய்யப்பட்டுள்ள நவீனமயமாக்கலுக்கான மொத்தத் தொகை 5.8 மில்லியன் ரூபா தொகையையும் விலைமனுதாரர் செலுத்துவதற்கு இணங்கப்பட்டுள்ளது. மெலும், 06 வருட காலம் கழிந்த பின்னர் ஒரு வருடத்திற்கு குத்தகைத் தொகை 10மு அதிகரிப்பதற்கும் விலைமனுதாரர் இணங்கியுள்ளார். இது தொடர்பில்

தனியார் போக்குவரத்து அமைச்சின் செயலாளரின் அறிவுரை மற்றும் அனுமதி கோரியுள்ளதுடன், அவ்வாலோசனை மற்றும் அனுமதிக்கு இணங்க விலைமனுதாரருக்கு பெற்றுக் கொடுத்துள்ள 06 வருடங்களுக்கு மேலதிகமாக இன்னும் 04 வருடங்கள் ஒப்பந்தம் நீடிக்கப்பட்டது. (இணைப்பு 02 – I மற்றும் 02 – II)

## 4.5 தாமதாகிய செயற்றிட்டங்கள்

மெதிரிகிரிய, மெதகம, கிண்ணியா பேருந்தத் தரிப்பிடங்களுக்கான ஒப்பந்ததார நிறுவனம் கால நீடிப்பினைக் கோரியுள்ளது. ஆலோசனை நிறுவனம் (அரச பொறியியற் கூட்டுத்தாபனம்) அது குறித்து பரிந்துரையினை அனுப்பியதன் பின்னர் அது தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு ஏற்பாடகியுள்ளது.

கிளிநொச்சிக்கான ஆரம்பத்தில் உத்தேசிக்கப்பட்ட காணி மாற்றமடைந்ததுடன், புதிய உத்சேிக்கப்பட்ட காணி 2017 மார்ச் 10ஆந் திகதி நிர்மாணப் பணிகளை மேற்கொள்வதற்கு கிடைத்தமையால் ஒப்பந்த ஆவணங்களின் பிரகாரம் நிர்மாணப் பணிகளைப் பூர்த்தி செய்யவேண்டிய திகதி 2017 ஒக்டோபர் 10ஆந் திகதியாகும்.

## 4.6 முறையாகச் சுவீகரிக்கப்படாத ஆதனங்களில் செயற்றிட்டங்களை ஆரம்பித்தல்

பேருந்துத் தரிப்பிடங்களை நிர்மாணித்தல் தொடர்பில் உத்தேசிக்கப்பட்ட காணிகள் குறித்து மாவட்ட.∴ பிரதேச அலுவலகம் அல்லது உள்ளூராட்சி நிறுவனங்களினால் பெற்றுக் கொடுக்கப்படுவதுடன், அவ் உத்தேசிக்கப்பட்ட காணிகள் நகரத் திட்டமிடல் தொடர்பிலான அரச காணிகளாகும்.

இப்பேருந்துத் தரிப்பிட நிர்வாகம் (வவுனியா தவிர்ந்த) உள்ளூராட்சி நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படுவதால் நிர்மாணப் பணிகளை மேற்கொண்டு உரிய நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்படும்.

அவ்வொப்படைப்பின் போது நிர்மணப்பணிக்கான எல்லாச் சொத்துக்களும் அந்நிறுவனத்தின் சொத்தாகக் குறிக்கப்படல் வேண்டும் என அறிவிக்குமாறு எமக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதுடன், அதற்கிணங்க நாம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம்.

அவ்வறிவித்தல் கடிதத்தின் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

வவுனியா பேருந்துத் தரிப்பிடம் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் நிர்வகிக்கப்படுவதனால், அந்நிலம் நீண்ட கால குத்தகை முறையின் கீழ் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிற்கு வவுனியா மாவட்டச் செயலகம் மூலம் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.

## 4.7 பதவியணியினர் நிர்வாகம்

2016/12/31ஆந் திகதியில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பதவி வெற்றிடங்களில் 35இல் 05 நிறைவேற்று அதிகார மட்டத்திலான பதவிகளாகும். அவற்றில் ஒரு பதவி பணிப்பாளர், நிதி மற்றும் கொள்வனவுப் பதவி என்பதுடன், ஏனைய 04 பதவிகளும் போக்குவரத்துப் பொறியியலாளர் பதவிகளாகும். இப்பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு பத்திரிகை அறிவித்தல் வெளிடுவதன் மூலம் மற்றும் அனுமதிக்கப்பட்ட இணையத்தளங்களில் வெளியிடுவதன் மூலமும் விண்ணப்பப்பத்திரங்கள் கோரப்பட்டன. அதன் படி அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு படிமுறைகளுக்கு அமைய தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டனர். இப்பதவிகளுக்கு தெரிவாகிய விண்ணப்பதாரிகள் இப்பதவிகளுக்கான சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய சலுகைகள் குறித்து திருப்தியடையாமையால் இப்பதவிகளைப் பொறுப்பேற்பதற்கு மறுத்தனர்.

அதனால், நீண்ட காலமாக வெற்றிடமாகக் காணப்படும் பணிப்பாளர் நிதி மற்றும் கொள்வனவுப் பதவிக்காக அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு படிமுறையில் குறிப்பிட்டுள்ள தகைமைகளைத் திருத்தும்

பொருட்டு, முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. முகாமைத்துவச் சேவைகள் திணைக்கதினால் பெற்றுக் கொடுக்கப்படும் அறிவுறுத்தல்களின் பிரகாரம் இப்பதவிக்கான வெள்ளிடத்தை நிரப்புவதற்கு விண்ணப்பம் கோரும் நடவடிக்கை எதிர்காலத்தில் எடுக்கபடவுள்ளது.

மீதமுள்ள 30 பதவிகளுக்கான வெற்றிடங்களில் 28 பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், எஞ்சியுள்ள பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் மீதமுள்ள அவ்வெல்லா வெற்றிடங்களையும் பூர்த்திசெய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

மேலதிகமாகக் காணப்படும் 04 சாரதிப் பதவிகளில் ஒரு சாரதிக்கு பதவியுயர்வு கிடைத்துள்ளது. தற்போது மேலதிக சாரதிப் பதவிகள் 03 வரை குறைந்துள்ளது.

## 5. கணக்களிப்புப் பொறுப்பு மற்றும் நல்லாளுகை

### 5.1 நிதிக் கூற்றுக்களை முன்வைத்தல்

எதிர்வரும் வருடத்திற்கான நிதிக் கூற்றுக்களை குறிப்பிட்ட காலவரையறையில் கணக்காய்விற்கு முன்வைப்பதற்கு அவதானத்திற் கொள்ளப்பட்டது.

### 5.2 கொள்வனவுத் திட்டம்

(அ) கொள்வனவு வழிகாட்டல் ஏட்டின் 4.2.1இற்கு இணைவாக பிரதான கொள்வனவுத் திட்டமொன்று 2016ஆம் ஆண்டிற்கு தயாரிக்கப்பட்டுள்ளதுடன், அனுமதிக்காகப் போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

எனினும், பதவியணியில் காணப்பட்ட பற்றாகுறை காரணமாக பிரதான கொள்வனவுத் திட்டம் தொடர்பிலான பணிகளில் சிற்சில குறைபாடுகள் ஏற்பட்டுள்ளதாக ஒப்புக் கொள்வதுடன், 2017ஆம் ஆணடில் கொள்வனவு வழிகாட்டல் ஏட்டின் 4.2.1இற்கு இணைவாக கொள்வனவுத் திட்டத்தினைத் தயாரித்து அதற்கான சபை அனுமதியினையும் பெறுவதற்கு செயற்பட்டுள்ளதாக தயவுடன் மேலும் அறியத் தருகின்றேன்.

(ஆ) இவ்விலைமனுவிற்கான விருப்பத்தினைத் தெரிவித்து ஐந்து விண்ணப்பதாரிகளே அனுப்பி இருந்தனர். ஏனைய விண்ணப்பதாரிகள் விலைமனு பணத்தினை தவணை அடிப்படையில் செலுத்துவதற்கு கோரியிருந்தனர். அவ்வாறு தவணை அடிப்படையில் செலுத்தவதற்கு அனுமதி கடைக்காதமையால் ஏனைய எட்டு விண்ணப்பதாரிகளும் இவ்விலைமனுவை மறுத்துள்ளனர்.

(இ) இவ்விலைமனுவின் அனுமதிப்பத்திரங்களை வழங்கும் கால வரையறை தேர்தல் கால வரையறைக்குள் இருந்தமையால் தேரிதல் ஆணையாளரின் எழுத்து மூல கட்டளையின் பேரில் இவ்விலைமனுவினை வழங்குவதற்கு நேரகாலம் எடுத்தது.

### 5.3 வரவுசெலவுப் பேரேட்டுக் கட்டுப்பாடு

எதிர்வரும் ஆண்டில், விசாரணையில் குறிப்பிட்டுள்ளவாறு பாதிடப்பட்ட மற்றும் மெய் வருமானச் செலவினங்களுக்கும் இடையிலான வேறுபாடுகளைக் குறைப்பதற்கு கவனஞ் செலுத்துவதற்கு அவதானத்திற் கொள்ளப்பட்டது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

(அ) புதிய பயணிகள் சேவை அனுமதிப் பத்திரங்களை வழங்கும் போது விலைமனு கோரல் மூலம் மேற்கொள்ளப்படுவதுடன், விசேட காரணமொன்று இல்லாவிடின், அவ்விலைமனுக்குரிய கால வரையறையினுள்ளேயே பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அவ்வாறே அனுமதிப் பத்திரங்கள் குறித்து தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு உரிய ஆவணங்களைப் பேணுதல் மேற்கொள்ளப்படுவதுடன், நிறுவனத்தின் எல்லா செயன்முறைகளையும் ஒன்றிணைத்து தன்னியக்கத் தொகுதி ஒன்றின் ஊடாக தரவுகளைப் பெற்றுக் கொள்வதற்கு இலுமான விதத்தில் மென்பொருள் அபிவிருத்தி ஒன்றினைச் (ீசழஉநளள யுரவழஅயவழைெ ளுலளவநஅ ) செயற்படுத்துவதற்கு எதிர்காலத்தில் திட்டமிடப்பட்டுள்ளது. அப்போது உரிய தகவல்களை விரைவாகப் பெற்றுக் கொள்வதற்கு முடியும் எனவும் தயவுடன் குறிப்பிடுகின்றேன்.

(ஆ) கொள்வனவு நடவடிக்கைகள்

கொள்வனவு வழிகாட்டல் ஏட்டின் பிரகாரம் கொள்வனவுத் திட்டத்தினைத் தயாரிப்பதற்கும் கொள்வனவு நடவடிக்கைகளின் போது கொள்வனவு வழிமுறைகளைப் பின்பற்றுதல் குறித்தும் விசேட கவனஞ் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தயவுடன் அறிவிக்கின்றேன்.

(இ) பதவியணியினர் நிர்வாகம்

2017.08.30 ஆந் திகதியாகையில் காணப்படும் பதவி வெற்றிடங்களில் 95மூஐயும் விடக் கூடுதலாக நிரப்பப்பட்டுள்ளதுடன், மீதமுள்ள பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் மீதமுள்ள அவ்வெல்லா வெற்றிடங்களையும் பூர்த்திசெய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

(ஈ) நிதிக் கட்டுப்பாடு

எதிர்காலத்தில் திறைசேரி நிதி குறை பயன்பாடு ஏற்படாதிருக்க கவனஞ் செலுத்துவதற்கு அவதானத்திறி கொள்ளப்பட்டது.